இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation

2011

ஆடி, ஆவணி, புரட்டாதி

Vettimaniy

# வெற்றிமணி

மணி -61

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A.(Hons)

ஓசை 15


Orient Textiles &
Jewellery

மாணவர் கல்வி சிறக்க
எமது வாழ்த்துக்கள்

Konigswall16(AmHBF)
44137 Dormund
Germany

Tel: 0231-162377

## உலகின் உச்சியில் ஓர் நீச்சல் குளம்




சாதனையாளர் அரங்கில்.....



கலை அரங்கில்.....



பேய்!
சிவத்தம்பி பிறந்திட்டானடா!

மருத்துவ அரங்கில்.....





தமிழ் மாணவிக்கு முதலிடம்!

U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka

Aynagaran International

AYNGARAN


மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்

30, High Street, Colliers wood, London SW19 2AB, UNITED KINGDOM

மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றிமணி**



ஸ்தாபகர்
**அமரர் மு. க. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர் :
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு. க. சு. சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*
Germany

இணையாசிரியர்
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்**
(B.A.Hons), Dip.in.Edu.

Associate Editor
**Mrs. Valanteena Elangkovan,**
(B.A.Hons), Dip.in.Edu,
Jaffna.

கௌரவ ஆலோசகர்
**கலாநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

தொடர்புகளுக்கு :
**வெற்றிமணி**
தபால்பெட்டி ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.

T.P. : 0776686462
E-mail : vettimaniy@gmail.com

**மக்கள் தொடர்பு**
**திரு. சு. இளங்கோவன்** B.A.,
Dpi.in.S.Sc, Dip.in.F.Sc, Dip.in.S.B.M., Spl Trd.
**(யாழ்ப்பாணம்)**

Dr. **கதிர்துரைசிங்கம்** (R.M.O)
**(கனடா)**

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
**(இங்கிலாந்து)**

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு.
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச் செல்கிறது.

**அரவிந்தர்**




## இனிய வாசகர்களுக்கு!

வெற்றிமணியின் இனிய வாழ்த்துக்கள். அடுத்து வரும் வெற்றிமணி பத்திரிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், கதைகளை மாணவரிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வரவேற்கின்றோம். அத்தோடு தேசிய, மாகாண, மாவட்ட மட்டப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களது புகைப்படங்கள், விபரங்களையும் அனுப்பி உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். வெற்றிமணியை உங்களது நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

திருமதி. வலன்ரீனா இளங்கோவன்
இணை ஆசிரியர், வெற்றிமணி.

## வெற்றிமணியை ஆர்வமாகப் படிக்கும் கலைஞர்



# கடலுக்கு அடியில் சொர்க்க விடுதி





- மாதங்கி

எதிலும் முதன் முதலாக ஆரம்பித்தவர்கள் நாமே என்பதில் ஒரு குஷி இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் உலகம் போகும் வேகத்தில் முதன் முதலாக என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே பல முதலைகள் விழுங்க வந்துவிடும்.

இருப்பினும் ஒன்றைப் பார்த்து ஒன்றினை உருவாக்குவது சுலபம். தனியாக தன் சுயசிந்தனையில் உருவாக்குவது கடினம். அது கடினமாக இருந்தாலும் அதில் இருக்கும் ஆத்மதிருப்தி வேறு எதிலும் இருப்பதில்லை.

எனவே இன்று பல அழகான விடுதிகள் உலகெங்கும் குறிப்பாக சீனா, மாலைதீவு, பிஜி தீவு, துபாய் என பல நாடுகளில் கடலுக்கு அடியில் உருவாக்கப்பட்டு அதிசய உலா வந்தாலும், புளோறிடாவில் உள்ள கடல் ஆயவு மையம் தான் முதன் முதலில் இந்த சிறுவிடுதியைக் கடலுக்கு அடியில் 1970களில் அமைத்தது.

அதன் கருவே இன்று விருட்சமாக 12,000 சதுர அடி பரப்பான பாரிய நட்சத்திர விடுதிகளை தண்ணீருக்கு அடியில் அமைக்க ஏதுவானது.

இப்போதுகடலடியில் மனிதன் வாழும் ஆறு நட்சத்திர விடுதியை வடிவமைத்துக் கொடுத்துள்ளது அமெரிக்க நிறுவனமொன்று. பிஜி தீவுகளுக்கு அருகாமையில் தனியார் தீவொன்றின் கடலடியில் சுமார் 50 மீட்டர் ஆழத்தில் நீங்கள் காணும் இந்த அழகிய உல்லாசப்பயண விடுதி அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 40 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட இந்த ஆடம்பர கடலடி மாளிகையில் நீங்களும் தங்குவதானால் ஒரு நாளைய வாடகை 1500 டொலர்கள் மட்டுமே. கடலடியில் மீன்களைப் பார்த்தபடி வாழும் இந்த இனிய அனுபவத்திற்கு நீங்கள் கொடுக்கும் பணத்தின் ஒவ்வொரு சதமும் பயனுள்ளதாகவே அமையும் என்றும் அறிவித்துள்ளனர்.

பொதுவாக நீர்மூழ்கிக் கப்பலில் இருக்கும்போது கடலடி அமுக்கம் ஒன்று மனிதன் மீது தொழிற்பட்டுக் கொண்டே இருக்கும். அத்தகைய அமுக்கத்தின் பாதிப்பு இதற்குள் வாழ்வோருக்கு ஏற்படாத வகையில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்



டுள்ளன. இந்தக் கட்டடத்தினுள்ளே டெனிஸ் விளையாட்டு மைதானம், கடைகள், நீச்சல் குளம், உணவு விடுதி, கடலுக்குள் இங்கிருந்து மியாமிக்கு பறக்க விசேட விமான சேவை என்று பல சேவைகள் உள்ளன. அதேபோல கடலடியில் பயணம் செய்யவும் விசேட ஏற்பாடுகள் உள்ளன. அதேவேளை திடீரென ஆபத்து ஏற்பட்டால் தப்புவதற்காக நீர்மூழ்கிக் கப்பல்களில் உள்ளதுபோன்ற அத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளன.

**பிஜித் தீவும் தமிழர்களும்!**

பிஜித் தீவு என்றதும் அத்தீவிற்கும் தமிழருக்கும் சம்பந்தம் உண்டு என்பதனால் ஒரு சிறு குறிப்பு இங்கு : பிஜித் தீவில் கரும்பு சாகுபடி செய்வதற்காகப் பீகார், வங்காளம், பஞ்சாப் மற்றும் சென்னை மாகாணங்களிலிருந்து 1879 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பிஜித் தீவு பற்றியோ தாங்கள் எதற்காக அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பதைப் பற்றியோ எதையும் அறியாதவரக்ளாக இவர்கள் அங்கே போனார்கள். 1984ஆம ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்குப்படி பிஜி தீவில் 50,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 5,000 பேர்களுக்கு மட்டுமே ஓரளவு தமிழ் எழுதவும்படிக்கவும் தெரியும். பிஜித் தீவில் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு தமிழ் தெரியாது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தமிழர் வீடுகளில் தமிழ் பேசப்படவில்லை. தமிழைப் பேசுவதும் தாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்துவதும் அவமானத்திற்கு உரிய ஒன்றாகத் தமிழர்கள் கருதினார்கள். தமிழர்களுக்கு இருந்த தாழ்வு மனப்பான்மை காரணமாக தமிழ் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. சரி தமிழர் நிலையைவிட்டு மீண்டும் கடலுக்குள் செல்வோம்.

இப்போது துபாய் நாட்டில் "உலகில் முதன் முதலாக என்ற தோரணையுடன்" கட்டப்பட்டுள்ளது இன்னுமொரு கடலுக்கு அடியில் அமைந்த ஆறு நட்சத்திர விடுதி. அதன் தோற்றமும் அழகும் மனதைக் கொள்ளை கொள்ளும்.

உண்மையில் இயற்கை கொஞ்சும் அழகு அரிதான நாடுகளில் செயற்கை அரியணை ஏறி உலகை ஆட்சி செய்யும். இந்த இடத்தில் ஒரு பெருமூச்சு!

என்ன இல்லை எங்கள் திரு நாட்டில். இயற்கை எழில் கொஞ்சும் நாடல்லவா? மனங்கள் நலமானால் பூங்காற்று வீசாதா?



**திருமுருகன்**
**திருமண மண்டபம்**

**திருமண மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம்**
**திருமுருகன் கல்யாண மண்டபம்**

திரு.சிவசுப்பிரமணியம்
(செட்டியார்)
தொலைபேசி : 0776660211


கந்தசாமி கோவில் வடக்கு வீதி,
கரந்தன் வீதி, நீர்வேலி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் உச்சியில் ஒரு நீச்சல் குளம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODIC DIVISION






© Reuters

இடத்தை மாத்திப் பார்ப்பதில்தான் மனிதனுக்கு எத்தனை ஆசை. ஒரு வீட்டிலே ஒரு சிறு அலுமாரியை எடுத்துக் கொள்ளுங்கள். அது எத்தனை தரம் இடம் மாறிமாறி நிற்கும். ஒவ்வொரு முறையும் வீடு ஒழுங்கு பண்ணும்போதும் இந்தமாற்றம் அடிக்கடி நடக்கும்.


இது வீட்டில் மட்டுமல்ல, நாட்டிலும் தான்.



ஒரு நீச்சல் குளத்தினை எடுத்துக் கொண்டால் நல்ல சூரிய ஒளிபடும் இடத்தில், அழகான புற்தரையின் மத்தியில் அமைத்திருப்பார்கள். புற்தரையிலும், நீரிலும் வானத்தைப் பார்த்தபடி படுத்திருந்தால் எப்படி இருக்கும். அட இப்படித்தான் இருக்கும் என செயலில் முந்திவிட்டது சிங்கப்பூர்.

மெரீனா பே சேண்ட்ஸ் (Merina Bay Sands) ஹோட்டல் 55 மாடிக் கட்டடங்களின் மேல் அதாவது 650 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட மூன்று கட்டடங்களையும் இணைக்கும் உச்சியில் படகுவடிவில் அமைந்துள்ளது இந்த நீச்சல் தடாகம். தடாகத்தின் பெயர் "ஸ்கை பார்க்" (Sky Park) இன்பினிடி (Infinity pool) நீச்சல் குளம்.

ஒலிம்பிக் நீச்சல் குளத்தைவிட 3 மடங்கு பெரியது. இங்கு சிறு வள்ளங்கள் கூட உபயோகப்படுத்தப்படுகிறது.



உலகிலேயே கட்டடத்திற்கு மேல், இவ்வாறானதொரு பெரிய நீச்சல்குளம் கட்டப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

35 மாடிகள் கொண்ட இந்த ஹோட்டலில் சுமார் 2,560 அறைகளைக் கொண்டதாகவும், அறை ஒன்றின் ஒருநாள் வாடகையாக கட்டணம் சுமார் 350 ஸ்டேலிங் பவுண்ட்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 4 பில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஹோட்டல், ஆண்டுக்கு சுமார் 40 மில்லியன் டொலர்களை இலகுவாகச் சம்பாதிக்கும் என அதன் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நீச்சல் அடித்துக்கொண்டு தொடுவானத்தையும் பூமியையும் பூரிப்போடு பார்த்து மகிழலாம். ஆனால் பூமி நடுக்கத்தைப் பற்றி கனமும் சிந்திக்கக் கூடாது.



© Reuters


இயற்கை அழகினை இரசிக்க ஒரு கூட்டமும், செயற்கை விநோதங்களைக் காண ஒரு கூட்டமும் இந்த உலகில் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். இவர்களை வளைத்துப்போட்டால் சுற்றுலா மூலம் வருமானத்தைப் பெருக்கலாம அல்லவா! வாழத் தெரிந்த நாடு சிங்கப்பூர். ஒரு காலத்தில் சிங்கப்பூரை இலங்கை போல அழகாக மாற்றுவேன் என்றார் அந்நாட்டின் முதல் பிரதமர். சிங்கப்பூர் மாறிவிட்டது.....

# விளம்பரமும் விபத்துக்களும்

மனதைச் சிதறவிடாது ஒருமுகமாக வைத்துக் கொண்டு வாகனங்கள் ஓட்டுதல் வேண்டும். வீட்டுப் பிரச்சினைகள், காதல், கற்பனைகள் என்று மனம் பனை ஏறினால் போதை ஏறி மேல் இருந்து வழவேண்டிவரும்.

பாதை மாறாத பயணங்கள் அமைய, வீதிகளில் அவதானமாக அவதானித்து பயணிப்பது அவசியம். இன்று உலகில் பல விபத்துகளுக்கு காரணம் போதை என்று சொல்லப்பட்டாலும், அதனை குடிவகைகளுக்குள் அடங்கும் போதையாக மட்டும் எண்ணிவிடமுடியாது. போதை என்கின்றபோது கவர்ச்சி, ஆண் பெண் இவர்களின் பாலுணர்வைத் தூண்டும், அல்லது மனதைக் குலைக்கும் விதமான எந்த வடிவமும் போதைதான். எனவே கவர்ச்சியான போதைகள் அடிக்கடி வாகன விபத்துக்களை உண்டுபண்ணுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன.





இன்று தமிழகத்தில் தெருக்களிலும், பேரூந்துகளிலும் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்கள் படுகவர்ச்சியாக மனதில் பம்பரம் விடுகின்றது. (கவர்ச்சி மட்டுமே மனதை திசை திருப்பும் என்று சொல்லவரவில்லை, சில சமயங்களில் தூய்மையான அழகும் மனதைத் தடுமாறவைக்கும்)

ஊரில் அன்று சிறுவயதில் நாம்இருந்த காலத்தில் தெருவில் ஒட்டப்பட்டிருக்கும் சினிமாப் பட விளம்பரங்களைப் பார்த்துக்கொண்டு சைக்கிள் ஓடி, எதிரும் புதிருமாக வரும் சைக்கிள்களுடன் மோதுவது உண்டு. அன்று "வேட்டைக்காரன்", "அன்பே வா", "ஒளி விளக்கு" என எம்.ஜி.ஆர் படங்களின் விளம்பர போஸ்டர்களும், சிவாஜியின் வசந்தமாளிகை, ராஜா, சுமதி, சுமதி என் சுந்தரி போஸ்டர்களும் இன்றைய முதியவர்களை அன்று முட்டிமோத வைத்தன.

எனவே கவர்ச்சியான சினிமா விளம்பரங்கள் அங்கு விபத்தைக் கொடுத்தன என்றால், வெளி நாடுகளிலும் அதே கவர்ச்சிதான் விபத்துக்களை உண்டுபண்ணுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.


வெளிநாடுகளில் பல பாலியல் படங்கள் முக்கிய சாலைகளில் முழித்தவண்ணம் உள்ளன. விளம்பரம் என்ற பெயரில் பெரும்பாரத்தை சுமப்பவர்கள் இங்கும் பெண்கள்தான். தெருவிலே எமக்கு முன்னே செல்லும் லொறிகளில் ஒட்டப்பட்டிருக்கும் படங்கள் எம்மை மனம் சிதறவைக்கலாம் அல்லது அது பற்றி வாகனத்துக்குள்ளே ஒரு பட்டிமன்றம் நடத்த ஏதுவாகலாம். எதுவானாலும் உள்ளது என்பது வெளிப்படையே. ஆனாலும் அவற்றைச் சட்டங்கள் எதுவும் கட்டுப்படுத்த தவறிய நிலையில், நாம்தான் எம்மனங்களை கட்டுக்குள் வைக்கப் பழகவேண்டும்.





வாகன விபத்துக்களை
தவிர்ப்பதற்கு
ஆசனத்திற்கு பட்டி
போடுவதோடு
வாய்க்கும் சேர்த்து போட்டால்
விபத்துக்கள் குறையும் என்பதனை
நகைச்சுவையாகச் சொல்லும்
கேலிச்சித்திரம் ஒன்று!

- கண்ணா



ஆயிரம் தடவை அளவெடு, ஒரு தடவை வெட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர்சன் ஆதரவில் மாணவர் அரங்கம்

# கொஞ்சம் நில்லுங்கள்...



வாருங்கள் : சமூகத்திற்கு முக்கிய மானவனாக வாருங்கள்.
அமருங்கள் : இன்னொருவருக்கு இடஞ்சல் இல்லாத விதத்தில் அமருங்கள்.
குடியுங்கள் : உங்களுக்கு பாதிப்பு இல்லாது குடியுங்கள்.
அருந்துங்கள்: உங்களுக்கு தகுந்தளவு அருந்துங்கள்.
எழுதுங்கள் : அறிவு வளரக்கூடியதை எழுதுங்கள்.
கதையுங்கள்: உங்களுக்குத் தேவையானதைக் கதையுங்கள்.
சிரியுங்கள்: ஒருவரைக் கேலி செய்யாத விதத்தில் சிரியுங்கள்.
சொல்லுங்கள்: தேவைப்படுவதைச் சொல்லுங்கள்.
கேளுங்கள்: சொல்லுபவர் எவ்வாறு சொன்னாலும் நிதானமாகக் கேளுங்கள்.
பாருங்கள் : மனதும் கண்ணும் விரும்பியதைப் பாருங்கள்.
வாழுங்கள்: எவருக்கும் ஒருபோதும் இடஞ்சல் இல்லாது வாழுங்கள்.
அணியுங்கள்:துப்பரவாகவும் ஆடம்பரம் இல்லாமலும் அணியுங்கள்.
கற்றுக்கொள்ளுங்கள் : எப்போதும் ஏதாவது கற்றுக் கொள்ளுங்கள்.
வரவேருங்கள் : கௌரவத்துடன் சகலரையும் வரவேருங்கள்.
சேமியுங்கள்: சிறிது சிறிதாக எதிர்காலத்திற்கு சேமியுங்கள்.
கழுவுங்கள்: மற்றவற்றைப்போல் மனதைக் கழுவுங்கள்.
துயிலுங்கள் : ஓய்வைப் பெறுவதற்குத் துயிலுங்கள்.
எழும்புங்கள்: உணர்ச்சியுள்ளவர்களாக எழும்புங்கள்.
விழிப்பாயிருங்கள் : அநேகமானதை பார்க்கவிருப்பதால விழிப்பாயிருங்கள்.
சொல்லுங்கள்:சொல்லவேண்டிய விடயத்தை துணிந்து சொல்லுங்கள்.
பாதுகாருங்கள்: மண்ணையும் இனத்தையும் பாதுகாருங்கள்.
கொடுங்கள் : குறைவில்லாது கொடுங்கள்.
மதியுங்கள்: யாவரையும் சமனாக மதியுங்கள்.
சகியுங்கள் : யாவற்றையும் சகித்துக் கொள்ளுங்கள்.
அழுங்கள் : துக்கமேற்படும்போது அழுங்கள்.
உழையுங்கள்: நேர்மையுடன் உழையுங்கள்.
பின்பற்றுங்கள்: பெரியோரைப் பின்பற்றுங்கள்.
முயலுங்கள்: உங்களால் முடியுமட்டும் முயலுங்கள்.
செல்லுங்கள்:செல்லவேண்டிய இடத்திற்கு துணிந்து செல்லுங்கள்.
வாருங்கள் : சமுதாயத்திற்குத் சேவையாற்றக்கூடிய வராக வாருங்கள்.
சாவுங்கள் : நாட்டிற்கு சேவை செய்து நல்ல ஒரு மனிதனாகச் சாவுங்கள்.

**ச. பரனிகா**
தரம் – 10,
யா / யாழ் இந்து மகளிர் கல்லூரி.

# தெரிந்து கொள்ளுங்கள்...



1. சினிமா தியெட்டர் இல்லாத நாடு எது?
**பூட்டான்.**
2. முதன் முதல் சினிமா (கண்காட்சியாக) எப்போது எங்கே நடைபெற்றது?
**1895இல், பரிஸ் நகரத்தில்.**
3. துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு எது?
**ஸ்பெயின்**
4. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி எது?
**பாளி**
5. பின்னோக்கி பறக்கக்கூடிய பறவை இனம் எது?
**ஹம்பிங் பேட்**
6. குடியரசு என்னும் புகழ்பெற்ற நூல் எழுதியவர் யார்?
**பிளேட்டோ.**
7. நாணயங்கள் இல்லாத நாடு எது?
**பராகுவே.**
8. மொழிகளில் கடினமான (எழுத, படிக்க, வாசிக்க) மொழி எது?
**சீன மொழி.**
9. உலகின் மிகப்பெரிய நூலகம் எங்குள்ளது?
**ரஷ்யாவில் (லெனின் நூலகம்)**
10. மிகக்குறைந்த எழுத்துக்கள் கொண்ட மொழி எது?
**ஹாவாய் - 12 எழுத்துக்கள்**
11. மூன்று இதயம் கொண்ட உயிரினம் எது?
**ஒக்டோபஸ்**
12. இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ் பத்திரிகை எது?
**உதயதாரகை**
13. இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை எது? எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது.
**உடுவில் மகளிர் கல்லூரி, 1824இல்**
14. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியின் பெயர் யாது?
**D.S.சேனநாயக்க.**
15. உலகில் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட நாடு எது?
**கனடா**

**அ. சரண்ராஜ்**
வர்த்தகப்பிரிவு - 2012,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# உங்களுக்குத் தெரியுமா?



1. ஆடு – கடா, மறி, யானை– களிறு, பிடி போல குதிரை – குண்டு, வடவை.
2. மாடு – நாம்பன், பசு, கோழி – சேவல், பேடு இவ்வாறு நரி – ஓரி, பாட்டி
3. புகையிலை – சிற்பம், பாடம் இவ்வாறு வைக்கோல் – கற்றை, போர்
4. பயறு – பருப்பு, நெல் – அரிசி, பலாப்பழம் – சுளை இவ்வாறு கற்றாளை – சோறு.
5. மாடு – சாணம், பறவை – எச்சம், யானை – இலத்தி இவ்வாறு கழுதை – விட்டை.

**ர. பவதாரணி**
தரம் – 8,
க/ கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி,
நாவலப்பிட்டி.

# சிந்தனைத் துளிகள்



1. நல்ல செயல்களின் பின்னனியிலே நற்சிந்தனை நிழலாகும்.
2. தந்தையின் வழிகாட்டலுக்கு இணை எதுவும் இல்லை.
3. போதும் என்ற மனம் தான் பொறுமையுடன் சிந்திக்கும்.
4. அறிவும் தெளிவும் பெருகும்போது பயம் அகன்று போகும்.
5. மகிழ்ச்சியோடு மேற்கொள்ளப்படும் எந்தக் கடமையும் கடினமானது அல்ல.

**செ. டிலைக்சனா**
வ/தவசிக்குளம் அ.த.க பாடசாலை.
சாஸ்திரி கூமாங்குளம், வவுனியா.

# ஒழுக்கம் விழுப்பம் தரும்



"ஒழுக்கம் விழுப்பம் தரலான்" எனத் தொடங்குவது வள்ளுவரின் வாக்கு. ஒருவரின் வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கின்றது. சீரிய வாழ்வுக்கு சிகரமாக அமைவது ஒழுக்கமே. ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் உயர்வும் சிறப்பும் இல்லாமற் போகிறது.

மனிதன் மனிதனாக இருப்பதே தலைசிறந்த ஒழுக்கம். அதை நாம் எமது உள்ளத்தில் நன்கு பதித்துக்கொள்ளவேண்டும்.

நாம் உலகம் மதித்து போற்றும் வகையில் வாழவேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் அவ்வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ்வதே எமது வாழ்வின் இலட்சியமாகும். நாம் இருக்கும் காலத்தில் ஒழுக்கமாக இருக்கவேண்டும். பொருளிட்டு வாழ்வது எமது நோக்கமென்றால் புகழீட்டி வாழ்வது எமது குறிக்கோளாக இருக்கவேண்டும். நாம் எப்பொழுதும் ஒழுக்கத்தை எமது உயிரினும் மேலாக மதித்தல் வேண்டும். ஒழுக்கமுடையோர் உயர் வடைவர். ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர். இயேசு, காந்தி, நேரு, புத்தர் போன்றோரின் வரலாற்றை புரட்டிப்பார்க்கும்போது அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்.

**யோ. மிதுஷா**
தரம் – 11,
யா / வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.


*visit our new show room...*



சுந்தர்சன் Suntharsan

DISTRIBUTORS OF ELECTRIACL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS.

சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்

மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகிறோம்.



தொலைபேசி இல. : 021 222 2751
021 4591569
தொலைநகல் : 021 222 2751


எதனையும் செய்யாமல் முடியாது என்று எண்ணாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜமுகன் ஹாட்வெயர் ஆதரவில் சாதனையாளர் அரங்கு

### யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியின் சாதனை



2011ஆம் ஆண்டிற்கான தமிழ்த தினப் போட்டியில் பிரிவு ஐந்தில் குறுநாடக ஆக்கப்போட்டியில் தேசிய மட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி செல்வி மைதிலி இராஜதுரை முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். இவரை நெறிப் படுத்திய ஆசிரியை திருமதி. இராமதாஸ் அவர்களையும் சாதனை படைத்த மாணவியையும் வெற்றிமணி சாதனையாளர் அரங்கு பாராட்டுகின்றது.

### முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலய மாணவியின் சாதனை!



தேசியமட்ட தமிழ்மொழித்தின போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்தின் முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலய மாணவியான எடின்சிகா பிரேமானந் 11 வயதுப் பிரிவில் ஆக்கத்திறன் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். இவரை வெற்றிமணி சாதனையாளர் அரங்கு மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றது.

### யா/விக்டோரியாக் கல்லூரி மாணவிகளின் சாதனை!



யா/ விக்டோறியா கல்லூரி மாணவிகள் மாகாண மட்டத்தில் நடைபெற்ற எல்லே போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களை வெற்றிமணி சாதனையாளர் அரங்கு பாராட்டி மகிழ்கின்றது.

## ஒலிம்பிக்கில் சிவபூமி மாணவன் சாதனை



கிறீஸின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் செல்வன் சிவராசா துஷ்யந்தனுக்கு அண்மையில் யாழ் நகரில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று இலங்கைக்கும் தமிழினத்திற்கும் பெருமை சேர்த்த துஷ்யந்தனை பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு வரவேற்றனர். இவர் **4 x 100** மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி சார்பாகப் பங்குகொண்டு இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய துஷ்யந்தன் அவர்களுக்கு நல்லூரிலிருந்து சிறப்பு ஊர்தியில் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்பட்டார். மக்கள் வீதியின் இருபுறமும் திரண்டுநின்று சாதனை வீரனை வரவேற்றனர். இந்த வரவேற்பு நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிவபூமி ஸ்தாபகர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களான எஸ்.சிவலிங்கராஜா, அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பின் கௌரவிப்பு நிகழ்வு சிவபூமி பாடசாலையில் இடம்பெற்றது. இங்கு மாணவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

துஷ்யந்தன் கிறீசுக்குச் செல்வதற்காக எடுக்கப்பட்ட



பாராட்டுவிழாவில் யாழ்.வெற்றிமணி அவரை கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. துஷ்யந்தன் மேலும் பல சாதனைகளை படைக்கவேண்டுமென வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.

## யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் வரலாற்றில் படைத்தது சாதனை!



கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வரலாற்றில் அண்மையில் நிறைவடைந்த வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் ஜெ.அபிமன், சு. தமிழரசன் ஆகியோர் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இவ்வெற்றிகள் மூலம் பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள் இருவரும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேற்படி விளையாட்டுப் போட்டியில் 17 வயதின் கீழ் பிரிவில் இடம்பெற்ற 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் செல்வன் ஜெயேந்திரன் அபிமன் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் 15 வயதின் கீழ்ப் பிரிவில் நீளம் பாய்தல் போட்டியில் செல்வன் சுதாகரன் தமிழரசன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவ்வெற்றிகள் கொட்டடி நமசிவாய பாடசாலை வரலாற்றில் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் சிறிய துண்டு நிலம் கூட விளையாடுவதற்கு இல்லை. விளையாட்டுப் போதனாசிரியரும் இல்லை. இந்நிலையில் சாதனை படைத்த இம்மாணவர்களை வெற்றி மணி சாதனையாளர் அரங்கு தேசிய மட்டத்திலும் சாதனை படைக்க பாராட்டுகின்றது.



## யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவனின் சாதனை



கொழும்பு இந்துக் கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கப்போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் செல்வன் நடேசு ஜெயவானுஜன் பிரிவு 4இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவருக்கான விருதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிக் கௌரவித்துள்ளார். இவர் மேலும் பல விருதுகளைப் பெற வெற்றிமணி சாதனையாளர் அரங்கு பாராட்டுகின்றது.

T.P. 2833

உ

கற்பக விநாயகர் துணை

KAJAMUGAN HARDWARE

KMH

கஜமுகன் ஹாட்வெயர்

சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

*Hardware Merchants, Importers of Building Materials, Cement, Paints, Electrical Goods, Cycles, Cycle Parts & Accessories.*

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

147, 149, Stanley Road,
Jaffna.



உன் இலட்சியத்தை விட அதனை அடையும் வழி முக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EUT ஆதரவில்
# சிறுவர் அரங்கம்

## பசு



1) பசு ஒரு மிருகமாகும்.
2) பசு பால் தரும்.
3) பசு புல் மேயும்.
4) பசு கன்று ஈனும்.
5) பசுவின் சாணம் வீடு மெழுகு வதற்கு உதவும்.

*கு. கஜானனன்*
தரம் 1,
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## விடுகதை



1) ஒன்றையொன்று பார்க்காது ஒன்றாய் எதையும் பார்க்கும் அது என்ன?
**கண்கள்**
2) வேலி போடாத வயல் விதைத் தாலும் விளையாத வயல் அது என்ன?
**வானம்**
3) இரவில் கண் விழிப்பாள், பகலில் தூங்குவாள் அவள் யார்?
**அல்லிப்பூ**
4) உடன் வருவான் ஆனால் துணைக்கு வரமாட்டான். அவன் யார்?
**நிழல்**
5) தேய்வான், செருப்புமல்ல, வளர்வான் மரமுமல்ல அவன் யார்?
**நிலா**
6) மணமில்லாத மலர்கள் மாலை கட்டாத மலர்கள். அது என்ன?
**நட்சத்திரங்கள்**
7) பாடிப்பறப்பவன், பயமுறுத்தி திரிபவன் அவன் யார்?
**நுளம்பு**
8) கையிலுள்ள கரும்பு தண்ணீரைக் கண்டால் விரியும் அது என்ன?
குடை.

*ஜெ. திருஷ்டாயினி*
தரம் 2,
யா/ ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை.



யா / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி யாலய மாணவன் செல்வன் அலோசியஸ் அபிராஜ் (தரம் 1) பாட சாலை கலைநிகழ்வில் வேப்பிலை நடனத்தில் தோற்றும் காட்சி யினைப் படத்தில் காணலாம்.

## வேடனும் கரடியும்



ஒரு ஊரில் வேடன் ஒருவன் இருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் வேட்டையாடச் செல்வான். ஒரு நாள் வேட்டையாடச் சென்றவேளை ஓர் கரடியைக் கண்டான். தனக்கு அன்று நல்ல வேட்டை என நினைத்து அம்பை விட குறி பார்த்தான். அப்போது கரடி கீழே விழுந்து புரண்டது. இதைக் கண்ட வேடன் சற்று தடுமாறினான். பின்னர் சிறிது நேரத்தின் பின் கரடியின் அருகில் சென்று பார்த்தபோது அதன் கண்களிலிருந்து இரத்தம் வருவதைக் கண்டான். உடனே அவனை அறியாமலே இரக்கம் ஏற்பட்டது. மூலிகைகள், மருந்துகள் கொண்டு கண்ணில் வைத்துக் கட்டினான். சிறிது நேரத்தின் பின் கரடி எழுந்தது. அவனைப் பார்த்துவிட்டு எங்கோ ஓடியது.

வேடன் என்ன செய்வது என எண்ணி யோசித்தபடி இருந்தான். சிறிது நேரத்தில் தேன், இனிய சுவையான பழங்களுடன் கரடி வந்தது. வேடன் மகிழ்ந்தான். உடனே கரடி பழங்களைக் கொடுத்தது. வேடன் அதனைச் சுவைத்தான். இவ்வாறு ஒருவர் செய்த உதவியால் வேடனும் கரடியும் பல காலம் நல்ல சிநேகத்துடன் வாழ்ந்து வந்தார்கள். எனவே சிறுவர்களாகிய நாமும் இரக்கம்கொண்டு வாழப்பழக வேண்டும்.

*யோ. மிதுசன்*
தரம் 4,
யா/ வயாவிளான் ம.ம. வித்தியாலயம்.

## எங்கள் ஆசிரியர்

எங்கள் ஆசிரியர் வருகிறார்
எழுந்து வணக்கம் சொல்லுவோம்
பொங்கும் அவரின் சிரிப்பிலே
புதிய நாளைத் தொடங்குவோம்
பிரம்பு கையில் இல்லையாம்
பேச்சும் ஏச்சும் இல்லையாம்
அரும்பும் கனிவு முகத்திலே
அவர்தான் எங்கள் ஆசிரியர்
திறந்தவெளியில் ஆடுவோம்
சேர்ந்து ஆசிரியர் பாடுவார்
சிறந்த அறிவு பெற்றிட
செயல் முறையில் பயிற்றுவார்.

*எஃப். அப்ரின்*
தரம் 2,
ஆயிஷா ம.ம. வித்தியாலயம், கந்தளாய்.

## உலகில் பெரியவை



1) கண்டம் – ஆசியா
2) சமுத்திரம் – பசுபிக்
3) தீவு – கிறீன்லாந்து
4) பாலைவனம் – சகாரா
5) மலைத்தொடர் – எவரெஸ்ட்
6) நூலகம் – லெனின் நூலகம் (மொஸ்கோ)
7) விமான நிலையம் – ஜோட் டக் (சவுதி)
8) ஏரி – கிபீரியா ஏரி
9) மாளிகை – வத்திக்கான் மாளிகை
10) சுவர் – சீனப்பெருஞ்சுவர்
11) வாவி – சுப்பீரியர் வாவி.
12) ஆலயம் – புனித பேருது ஆலயம்
13) நூதனசாலை – பிரிட்டிஷ் நூதனசாலை
14) நதி – நைல் நதி
15) பாலூட்டி – திமிங்கிலம்

*இ. இலக்கியா*
தரம் - 4,
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## நான் வைத்தியரானால்...



நான் வைத்தியரானால் வசதி யற்ற ஏழை மக்களுக்கு பணம் வாங் காது சேவையாக பணியாற்றுவேன். பல மாற்றமுடியாத நோய்களிற்கு மருந்து வழங்குவேன். உடல் ஊனமுற்றவர் களுக்கும் சிகிச்சை மூலம் உடல் உறுப்புக்களையும் மாற்றி நல்வாழ்வு அளிப்பேன்.

வைத்தியசாலையை நன்றாகச் செயற்படுத்துவேன். எல்லோரையும் சமமாகக் கருதி இரவு பகல் பாராது சேவையாற்றுவேன். வைத்தியத்துறையில் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்துவேன். வைத்தியத் தொழிலான இப்புனிதமான தொழிலை விரும்பும் நான் நன்றாகக் கற்று எனது தந்தையைப்போல் ஒரு வைத்தியராக வரவேண்டு மென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*கிருத்திகா கணேசவேல்*
தரம் 4,
யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

## My Pet



1) My pet is Dog.
2) My pet's name is Killy.
3) It is Brown in colour.
4) Killy is very fat and small.
5) It's likes milk and egg.
6) I also give bones.
7) Killy can run fast.
8) I like my pet.

**Y. Mathusan**
Year -2,
J/ Vayavilan M.M.V.


EUT
EQUIP UNIT TRUST
T.P: 021 2240110
தளபாட விற்பனை நிலையம்
சிறுவர் அரங்கம் சிறக்க சிறுவர் மனங்கள் சிறக்கும்





Chunnakam East, Chunnakam.
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.


உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## எஸ். வி. முருகேசு ஆதரவில்
# மருத்துவ அரங்கு

## இரத்தத்தில் கொலஸ்ரோல் (கொழுப்பு)



சி. கார்த்தீபன
க.பொ.த (உ/த) 2010,
யாழ். மத்திய கல்லூரி,


இருதய நோயாளர்கள் இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவுகளையும்மற்றும் ஏனைய தீங்குதரும் பதார்த்தங்களின் அளவுகளையும் தெரிந்து கொண்டபின் எவ்வாறு உணவுக் கட்டுப்பாட்டில் ஈடுபடுகிறார்கள் என்பது முக்கியமானதாகும். இன்றைய உலகில் அதிகமான மரணங்கள் மாரடைப்பினால் ஏற்படுகின்றன. இந்த மாரடைப்பு நோய்க்கான பிரதான காரணம் இதய இரத்த நாளமான இடத்தில் அடைப்பு ஏற்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் நான் முதல் கூறியதுபோல் இரத்தத்தில் கொலஸ்ரோல் (கொழுப்பு) இருப்பதனாலே நாளத்தில் ஏற்படுகின்ற அடைப்பை அகற்றுவதினால் நன்மை அடையலாம். இவ்வாறு படியும் கொழுப்பை அகற்றுவதற்கு (By pass surgery) பைபாஸ் என்றழைக்கப்படுகின்ற சத்திர சிகிச்சையை் மேற்கொள்வார்கள். சில நேரங்களில் இப்படியான சிகிச்சைமுறையைச் செய்யாமல் Angioplasty என்ற முறையில் நீக்கும் முறையும் நடைமுறையில் உள்ளது. மேல் நாட்டு மக்களையே அதிகம் பாதிப்புக்குள்ளாக்கிய இந்த நோய் சில வருடங்களாக கீழைத்தேச மக்களையும் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. எங்கள் நாட்டிலும் கடந்த சில வருடங்களாக மாரடைப்பு நோயால் அதிக மரணங்கள் உண்டாகின்றன.



இரத்தத்தில் கொலஸ்ரோலின் அதிகரிப்பு ஏற்பட்டு இரத்தக்குழாய்களின் உட்புறம் கொழும்பு படிகின்றது. இதய நாளத்தில் இவ்வாறான படிவு ஏற்பட்டு உட்துவாரம் சிறிதாகி அப்பகுதிக்கான இரத்தச் சுற்றோட்டம் குறைவடைகின்றது. இதனால் இதயத் தசைகள் போதியளவு குளுக்கோஸ் ஒட்சிசன் இன்றி செயற்பட சிரமப்படுகின்றன. படிப்படியாக கொழுப்பு படிவு அதிகரித்து இதய நாளங்களில் நிரந்தர அடைப்பு ஏற்படுகிறது. இதனால் மார்புவலி இடையிடையே ஏற்பட்டு பின்னர் சடுதியாக மாரடைப்பு ஏற்படலாம்.

இருதய நோயாளர்கள் இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவுகளையும் மற்றும் ஏனைய தீங்கு தரும் பதார்த்தங்களின் அளவுகளையும் தெரிந்துகொண்டபின் எவ்வாறு உணவுக் கட்டுப்பாட்டில் ஈடுபடுபடவேண்டும் என்பது முக்கியமானது. எவராயினும் ஒருவரது குருதி கொலஸ்ரோல் 240mg / $D_1$ ஐக் காட்டிலும் அதிகமான அளவு காணப்படின் அவரை மேலதிக சோதனைக்குட் படுத்த வேண்டும்.

☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☺☺☺☺☺☺



# புற்றுநோய் செல்களை கட்டுப்படுத்தும் கரட்

கண்ணுக்கு மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படும் கரட்டில் ஏ, சி, கே போன்ற உயிர்ச் சத்துக்களும், பொட்டாசியம் போன்ற தாதுப்பொருளும் உள்ளது. புற்றுநோய் செல்களை அழிக்கும்.

நாம் உண்ணும் உணவில் வேறு எந்த காய்கனிக்கும் இல்லாத சிறப்பு கரட்டிற்கு மட்டுமே உள்ளது. இதில் உள்ள கரோட்டின் என்கின்ற உயரிய சத்து புற்றுநோய் செல்களை கட்டுப்படுத்துகிறது. கரட்டில் பீட்டா கரோட்டின் என்கின்ற சத்து நமது உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகப்படுத்துவதாக விஞ்ஞானிகள் தெரிவிகின்றனர். இந்த பீட்டா கரோட்டினில் உள்ள சிறப்பு அணுக்கள்தான் புற்றுநோய்க்கு எதிரியாக இருந்து செயற்படுகின்றது.

**கண்பார்வை குறைபாட்டினைப் போக்கும்**

விற்றமின் ஏ சத்து குறைபாட்டினால் ஏற்படும் மாலைக்கண் நோய் உள்ளவர்கள் தினமுழ் கரட்டினை சாப்பிட்டால் அவர்களுக்கு மாலைக்கண் நோய் எளிதில் குணமடைவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்புகளை கரைக்கும் சக்தி கரட்டிற்கு உள்ளதால் இதயம் தொடர்புடைய நோய்களை அண்டவே விடாது. வாரத்தில் இரண்டு நாட்களாவது நமது சமையலில் கரட்டினைப் பயன்படுத்துவது உடம்பிற்கு நல்லது. ஏனெனில் கரட்டில் உள்ள நார்ச்சத்து மிகுந்த நன்மை தருவதுடன் செரிமானத்தைத் தூண்டி நல்ல ஜீரண சக்தியைத் தருகின்றது.

**பக்கவாதத்தை அண்டவிடாது**

கரட்டினை பச்சையாகவே நிறைய சாப்பிடலாம். தினமும் கரட்டினை உண்பவர்களை ஸ்ட்ரோக் எனப்படும் பக்கவாத நோய் எட்டிப்பார்ப்பதில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் மூளையை சுறுசுறுப்பாக வைக்க உதவுகிறது. பற்களில் கரட்டினை மென்று சாப்பிட்டால் பற்களின் கறைகள் போய்விடும். தாங்கமுடியாத பசியையும் ஒரே ஒரு கரட் போக்கிவிடும்.

**அல்சரைக் குணப்படுத்தும்**

பீட்டா கரோட்டின் என்ற சத்து வயிறு தொடர்பான அனைத்து நோய்களையும் குணப்படுத்துகின்ற சக்தி கொண்டது. அல்சர் நோய் உள்ளவர்கள் வாரத்தில் மூன்று தடவை வீதம் இரண்டு மாதம் கரட் ஜூஸ் சாப்பிட்டால் வயிறு மற்றும் குடல் தொடர்புடைய நோய்கள் குணமடைவதுடன் மறுபடியும் இதுபோன்ற பாதிப்புகள் மீண்டும் எட்டிப்பார்க்காமல் செய்துவிடும்.

வயிற்றுக் கோளாறு காரணமாக ஒரு சிலருக்கு வாயில் துர்நாற்றம் ஏற்படுவதுண்டு. அவர்களுக்கு கரட் சிறந்த மருந்தாகும். வாரத்திற்கு 5 நாட்கள் கரட்டை நன்கு அரைத்து ஜூஸ் எடுத்து அதனுடன் எதுவும் கலக்காமல் பருகிவர வாய்நாற்றம் ஓடியே போய்விடும். ரத்தத்தில் சக்கரையின் அளவைக் கட்டுப்படுத்துழ் சக்தி கரோட்டினய்டுகளுக்கு உண்டு. எனவே நீரிழிவு நோயாளிகள் கரட்டினை உணவில் சேர்த்துக் கொள்வதனால் இன்சுரின் சுரப்பு சீரடையும்.

# ஆகா மிளகாயில் இத்தனை இரகசியமா?

எனது நண்பர் உணவருந்தும்போது அடிக்கடி பேப்பர் துவாலையால் தலையைத் தடவியபடியே இருந்தார். என்னைப் பார்த்து, "கொஞ்சம் உறைப்பான உணவு உண்டால் எனக்குத் தலையில் நிறையவே வேர்க்கும்" என்றார். "உறைப்பு நல்லது உடம்புக்கு ஆகவே கைவிட்டு விடாதீர்கள்" என்றேன். அவருக்கு மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் சொல்லலாம் என எண்ணுகிறேன்.

உறைப்பு உணவு செய்யக்கூடிய நன்மைகள் எவை எனத் தெரியுமா?

இதோ..........

நல்ல உறைப்பான உணவை உட்கொண்டால் பசி ஆர்வத்தினைக் குறைத்துவிடுமாம். எனவே உண்டி சுருங்கும். ஆகவே உண்டி சுருங்குதல் பெண்டிருக்கு மாத்திரம் அல்ல, ஆண்களுக்கும் அழகுதானே.



மிளகாயில் (இதற்குத் தாவரவியல் பெயர் : Capsicum) உள்ள பிரதான கூறு காப்சேய்சின் (Capsaicin) எனும் இரசாயனப் பதார்த்தம். இப்பதார்த்தம் மிகவும் நல்ல செயல் ஒன்றினை இரகசியமாகச் செய்கிறது.

உமது உடலிலே உள்ள கொழுப்பினை எரிக்கும் தன்மையுடைய புரதங்களில் ஒரு 20 வகையான புரதங்களை, 'சும்மா இருக்காதீர்கள் செயற்படுங்கள்" எனத் தூண்டிவிடுவதால், உடலின் அனுசேப இயக்கங்களின் (metabolic activities) வேகம் அதிகரிக்கிறது.

அதனால் கொழுப்பு எரிக்கப்பட்டு கலோறிகள் வெளியேறுகின்றன. (இப்போ விளங்குகிறதா ஏன்



தலையில் வேர்க்கிறது என்பதை. இந்த காப்சேய்சின் செய்கிற திருவிளையாடல் இப்போ புரிகிறதா? அதன் திருவிளையாடலால் கொழுப்பு எரிக்கப்படும்போது வெளியாகின்ற கலோறிகளால் உடல் வெப்பநிலை அதிகரிக்கச் செய்யும் அல்லவா? அதிகரிக்கும் வெப்பநிலையினைச் சீராக்க வேண்டும் தானே? உடல் வெப்பநிலையினைச் சீராக்குவதற்காக வியர்க்கிறது).

மிளகாய் உட்கொள்வதால் உடலின் உள்ளே உள்ள புற்று நோய்க்கான கலங்கள் அழிக்கப்படுமாம். எல்லோருடைய உடலிலும் புற்றுநோய்க்கான கலங்கள் இரப்பதாகவே ஆய்வாளர்கள் செல்கிறார்கள்.

ஒவ்வொருவருடைய நோய் எதிர்ப்புத் (Immunity) தன்மையே அக்கலங்கள் பெருகி நோய் ஏற்படாமல் தடுக்கின்றது என்கிறார்கள். அந்தத் தடையையும் மீறி புற்றுநோய்க் கலங்கள் எண்ணிக்கையில் அதிகரிக்க முயலுகையில் மிளகாயின் காபசேய்சின் உதவிக்கு வருகிறது.

உடலிலே ஏற்படுகின்ற நோவு மற்றும் உழைவினையும் உறைப்பு உணவு ஓட ஓட விரட்டி விடுகிறதாம். உறைப்பான உணவு உட்கொள்ளல் ஓரளவுக்கு மாரடைப்பினையும் தடுக்கவல்லது என்கிறார்கள். அத்துடன் குடற்புண் (Ulcer) போன்ற பற்றீரியாக்கள் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் உறைப்பான உணவு தடுக்கிறதாகக் கூறப்படுகிறது.

ஐயோ சாமி!

இதற்கான நம்ம குளம்பிலும், கறிகளிலும் மிளகாயத் தூளினை அள்ளிக் கொட்டிவிடாதீர்கள்.

- கனக்ஸ்

உ
முருகன் துணை



S.V. MURUGESU S.V. முருகேசு

எம்மிடம் அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Agent for
*Unilever Sri Lanka Ltd.*
*Energizer Lanka Ltd.,*
*Fonterra Brand Lanka (Pvt) Ltd.,*
*Maliban Biscuit Manufactories Ltd.,*
*Shell Gas Lanka Ltd.*

T.P.: 222 2911, 222 2202

154, Hospital Road, Jaffna.

உண்மை பேசுபவனிடத்தில் ஆண்டவன் அருகில் நிற்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ் ஆதரவில் ஆன்மீக அரங்கம்

**அன்பே சிவம்! சிவமே தமிழ்!!**

## சிவபெருமான் மூலமூர்த்தியாகவே இருத்தல் வேண்டும்!

– கவிஞர் வி.கந்தவனம்



சாந்தநாயகி சமேத சந்திர மௌலீசர் ஆலயம் மேற்குலக நாடுகளில் வாழும் சைவ மக்களுக்கு உன்னதமான ஒரு செய்தியை வலியுறுத்துவதாக உள்ளது. மேற்குலக நாடுகளில் சிவன் கோயில்கள் மிக அரிதாகக் காணப்படுகின்றன.

பல கோயில்களில் சிவன் பரிவார மூர்த்தி யாகவே வைக்கப்பட்டுள்ளார். சைவ சமயத்துக்கு முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவருக்குப் பரிவாரத் தகுதி அளிப்பது நல்லதல்ல.

அப்படிவைத்து வணங்குவதால் பெரும் பயன்களும் வரப்போவதில்லை. சிவபெருமானின் பெருமையை டோற்மூண்ட் சைவர்கள் நன்கு உணர்ந்து அவருக்குத் தனிக்கோயில் அமைத்திருப்பது சைவநெறி வளர்ந்து ஓங்க வழிவகுப்பதாக உள்ளது.

அவ்வகையில் சிவன்கோயில் கட்டுவதற்கு முன்னின்று உழைத்த அயடிவர்களைப் பாராட்டுகின்றேன்.

## நடராஜர் வடிவம்

**திருமதி வலன்ரீனா இளங்கோவன்**
B.A. (Hons) PGD in Edu.

சிவமூர்த்தங்கள் எல்லாவற்றிலும் தனித்தன்மை வாய்ந்ததும், மகத்துவம் உடையதும் உயர்ந்த தத்துவங்களை உள்ளடக்குவதும், சிறப்பானதுமானதுமாக விளங்குவது நடராஜர் மூர்த்தமாகும். பெருங்கருணை வள்ளலாகிய இறைவன் ஆன்மாக்கள் பொருட்டு தனு, கரண, புவன போகங்களைப் படைத்தருளுகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்து தொழில்களை ஆன்மாக்கள் நன்மை கருதிச் செய்கின்றான்.

திரிசடையானது விரிந்து பரந்திருக்க ஒரு திருக்கரத்தில் உடுக்கையும், மறு திருக்கரத்தில் மழு என்கின்ற ஆயுதமும், இன்னொரு திருக்கரத்தில் தீயையும் ஏந்தி நான்காவது திருக்கரத்தை அபயகரமாக்கி, முயலகன் என்ற குள்ள அரக்கன் மீது வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நின்று ஆடும் வடிவமே நடராஜர் வடிவமாகும்.

இம்மூர்த்தம் சிவாலயங்கள் எங்கும் காணப்படினும் தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள மூர்த்தம் மிகவும் மகத்தானது.


கோயில் என்ற பெயரைத் தனக்கே சிறப்புப் பெயராகக் கொண்ட தில்லைத் திருப்பதியின் மீதும், அங்கு நடனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள நடராஜர் மீதும் ஆறாக்காதல் கொண்டு அழகிய பக்திப் பாடல்களை சமயகுரவர்கள் நால்வரும் பாடியுள்ளனர். "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயு...." என்ற அப்பரின் திருவாக்கினை இவ்விடத்தில் நினைவு கூரலாம். இதிலிருந்து இத்தோற்றத்தின் சிறப்பு மிகத் தெளிவாகின்றது.

தில்லையைச் சென்றடைந்த சுந்தரமூர்த்தி நாயனார் நடராஜப் பெருமானின் திருநடனக் கோலத்தைக் கண்டு உருகி தன்வசமிழந்து நின்ற நிலையினை "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள நின்றார்" என்று சேக்கிழார் பெருமான் அழகாகக் கூறியுள்ளார். இவ்வாறு அடியார்களதும் திருவுருவத்தினை மனவாசகம் கடந்த தேவர் "உண்மை விளக்கம்" என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம்–
ஊற்றமா ஊன்று மலர்ப்பதத்தில் உள்ளதிரோத
முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்று மிக அழகாகக் கூறுகின்றார்.

சிவாயநம என்னும் சிகராதி பஞ்சாச்சரம் நடராஜப் பெருமானின் திருக்கரங்களை முறையே உடுக்கை ஏந்திய திருக்கரம், வீசும் திருக்கரம், அபயகரம், தீ ஏந்திய திருக்கரம், ஊன்றிய திருவடி என்பவற்றைக் குறித்து நிற்கின்றது.



படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களையும் முறையே உடுக்கை யேந்தியகை, அபயகரம், தீ ஏந்திய திருக்கை, தூக்கிய திருவடி, ஊன்றிய திருவடி என்பவற்றைக் குறித்து நிற்கின்றன.

சிவபெருமான் நித்தியமும் ஆடிக்கொண்டே இருக்கின்றான். அதை ஆனந்த தாண்டவம் என்றும் பஞ்சாட்சர வடிவம் என்றும் கூறுவர். தூக்கிய திருப்பாதம் என்று ஊன்றப்படுமோ அன்று ஆட்டமில்லை. ஆட்டம் இல்லையாயின் ஒன்றும் அழைய முடியாது. எப்பொழுதும் உயிர்களின் இதயம் துடித்துக்கொண்டிருப்பதற்கு காரணம் இவரது ஆட்டம் தான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ...." என்றும் "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே...." என்று ஞானிகள் கூறுகின்றனர். இம்மூர்த்தத்தில் 108 நிலைகள் உண்டு. இவை 108 கரணங்கள் என்றும் அழைக்கப்படும். இத்திருக்கூத்தின் நோக்கம் ஆன்மாக்களை செருக்கற்ற நிலையில், சிவாநந்த அமுதத்தைச் சுவைக்க வைப்பதற்காகும். மிக உன்னதமான தத்துவத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ள இம் மூர்த்தத்திற்கு உலகிலே இணை காண்பது அரிது. இது பற்றி ஆனந்த குமாரசாமி அவர்கள் "சிவ நடனம்" (Dance of Sive) என்ற அழகிய நூலை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். எனவே, இச்சிறப்பம்சங்கள் யாவற்றையும் நோக்கும்போது நடராஜர் மூர்த்தம் மிகவும் சிறப்பு மிக்கதும், சிறந்த தத்துவ விளக்கங்களை இது மக்களுக்கு விளக்கும் ஒரு வடிவமாகவும் உள்ளது எனலாம்.


☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☺☺☺☺☺☺

## இசையால் இறைவனடி பணிவோம்!



இன்று யேர்மனியில் சைவ ஆலயங்கள் பல மாநிலங்களிலும் அருள் சுரக்கின்றன. அண்மையில் டோற்மூண்ட் சிவன் கோயில் தேர்த்திருவிழா (10.07.2011) அன்று சிவன் பக்திபாமாலை என்ற ஓர் ஒலிப்பேழை வெளியீடு செய்யப்பட்டது. இந்த இசைப்பேழைக்கு இசையமைத்தவர் ஈழத்து இசைத்தென்றல் சிறுப்பிட்டி எஸ். தேவராஜன், காந்தக் குரலோன் செ. கணேஸ் பாடியுள்ளார். மேலும் பல இளம் மொட்டுக்கள் பாடி பக்திபாமாலையை மணம் பரப்பச் செய்துள்ளனர். இப்பேழையை திருமதி பிரியதர்சினி கணேஸ் தயாரித்து வழங்கியுள்ளார். பக்திமணம் பரப்பிய அனைவருக்கும் சிவத்தமிழ் வெற்றிமணி ஆகியவற்றின் இனிய வாழ்த்துக்கள். 2009ஆம் ஆண்டு இவர்கள் ஹம் காமாட்சி அம்மன் பக்திபாமாலையை வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கோபம்!



புத்தபெருமானை எல்லோரும் மதிப்பதைக் கண்ட ஒரு இளைஞன் அவரிடம் சென்று மற்றவர்களுக்கு புத்தியும் போதனையும் கூற உனக்கு என்ன அருகதை இருக்கு. நீயும் என்னைப்போல் ஒருவன்தானே! நீ ஒரு போலி, என குறைகூறித் தூற்றினான்.

தூற்றலுக்கு பதற்றப்படாத புத்தபிரான்! பரிசுப் பொருள் ஒன்றை வாங்கி ஒருவருக்கு கொடுப்பதற் காக நீ செல்கின்றாய். அந்தப் பொருளை அவர் ஏற்காவிட்டால் அப் பரிசுப்பொருள் யாருக்குச் சொந்தமாகிறது என்று கேட்டார். இது என்ன கேள்வி? நான் வாங்கிய பொருள் அவரிடம் சேராவிட்டால் அது எனக்குத்தானே சொந்தம் என்றான்.

புத்தர் : சிரித்துக்கொண்டு சரியாகச் சொன்னாய். உன் தாழ்வு உணர்வால் ஏற்பட்ட கோபத்தால் நான் இழிவுபடவும் இல்லை, பதற்றப்படவும் இல்லை! உன் கோபத்தை நான் உள்வாங்கவும் இல்லை. ஆதலால் அது உனக்கே சொந்தமாகின்றது! உன்னை நீயே காயப்படுத்திக் கொண்டாய் என்றார்.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழ்
சிவத்தமிழ்

M. K. S. Sivakumaran
Bost Box 2765,
58477 Ludenschied,
Germany.

அறிவியலலோடு ஒட்டிய ஆன்மீகக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.

மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com.
00492351 458862

உண்மை பேசுபவனிடத்தில் ஆண்டவன் அருகில் நிற்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். [முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி]

## பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்கள்



**திரு. சு. இளங்கோவன்**
B.A., Dip.in. SBM, Dip.in SSC, Dip.in. FSC, Spl.Trd. (WR)
ஆசிரியர்,
யா / மண்டதீவு மகாவித்தியாலயம்.

இன்றைய நிலையில் பல கிராமங்களுக்குச் சொந்தமாக இருந்த அல்லது கிராமத்து இளைஞர்களாலே விளையாடப்பட்டுவந்த கிராமிய விளையாட்டுக்கள் வழக்கொழிந்து அருகி, ஏன் அடியோடு மறைந்துவிட்ட நிலையைப் பார்க்கமுடிகின்றது. அன்று வழக்கிலிருந்த இளைஞர்கள் விளையாடிய விளையாட்டுக்கள் இன்று இல்லை.

இக்கால இளைஞர்களுக்கு அந்த விளையாட்டுக்களின் பெயர்கள் தெரியுமோ என்று சந்தேகப்படவேண்டியுள்ளது. ஆகவே கிராமத்துக்குரிய மக்களால் விரும்பி விளையாடப்பட்ட கிராமிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கிட்டிப்புள்ளு, பிள்ளையார் பேணி, கப்பல் பாத்தி, எட்டுப்பாத்தி, மாங்கொட்டை தட்டுதல் (நாலு பாத்தி), மாட்டுவண்டிச் சவாரி, பட்டம் விடுதல், போர்த்தேங்காய் அடித்தல், நாயும் இறைச்சியும், அன்ன ஊஞ்சல் ஆடுதல், கொக்கான், பாண்டி, தாயம், குளங்கரை போன்ற பல விளையாட்டுக்கள் ஆரம்ப கால விளையாட்டுக்கள் என்று அறியப்படுகின்றது. எனவே அவ்விளையாட்டுக்கள் பற்றியும் அவை விளையாடப்பட்ட முறை பற்றியும் நோக்கவேண்டியது அவசியமாகின்றது. சென்ற இதழ்களில் கிளித்தட்டு, கிட்டிப்புள்ளு, புள்ளுக்கிட்டி, நாயும் இறைச்சியும், கொக்கான், அன்ன ஊஞ்சல் என்பன பற்றி எடுத்து நோக்கப்பட்டது. இவ்விதழில் அன்ன ஊஞ்சல் ஆடுதல் பற்றி எடுத்து நோக்குவோம்.

### அன்ன ஊஞ்சல்

ஆரம்ப காலத்தில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் பிறந்துவிட்டால் யாழ்ப்பாணக் கிராமங்கள்



அன்ன ஊஞ்சல் ஆடுதல்



விழாக்கோலம் பூண்டு காட்சிதரும். அன்றைய தினம் பல பாரம்பரிய விளையாட்டுக்கள் ஊர்களில் விளையாடப்படும். அவ்வாறு விளையாடப்படும் விளையாட்டுக்களில் அன்ன ஊஞ்சல் ஆடுதல் மிகவும் முக்கியமானதும் தனித்துவமானதும் ஆன ஓர் விளையாட்டாகும்.

ஊரின் மத்தியில் ஆலயங்களுக்கு அருகில் ஓங்கி வளர்ந்து நிற்கும் பெரிய மரங்களில் அன்ன ஊஞ்சல் கட்டப்படும். பென்னம்பெரிய பாரக்கயிறுகளால் (வண்டில் காரர் வைத்திருக்கும் கயிறு) 25 அடி 30 அடி உயரத்தில் ஊஞ்சல் பலகை போட்டு கட்டப்படும். பலகை 4 அடி நீளமும் 2 அடி அகலமும் உடையதாக இருக்கும். பலகையில் 2, 3 பேர் இருக்க இருவர் எதிர்ப்பக்கம் நின்று கிழக்கு மேற்காக நின்று உதைஞ்சு உன்னி ஆடுவர். வழக்கமாக ஆடும் ஊஞ்சலுக்கு இவ் ஊஞ்சல் ஆட்டம் மாறாகக் காணப்படும்.

அன்ன ஊஞ்சல் ஆடும்போது "தன தனா தந்தோம்" என்று அடியெடுத்து கடவுளர் மீது பாட்டுக்கள் பாடியும் "ஏல ஏலோ தத்தைய்யாம் ஏல அம்மா" என கப்பல் பாட்டு பாடியும் ஆடுவர். சில இடங்களில் அன்ன ஊஞ்சல் ஆடும்போது "சிங்கார வேலா சிவசண்முகனே குமரா" எனப் பாடியும் ஆடுவர். இவ்வேளையில் ஊர் மக்கள் வட்டமாகத் திரண்டு நின்று தாமும் பாடி கரகோஷம் செய்து ஆரவாரம் செய்வர்.

இவ் அன்ன ஊஞ்சல் ஆட்டம் புத்தாண்டுக் காலத்தில் காலை தொடக்கம் மாலை வரை நடைபெறும். அன்ன ஊஞ்சல் ஆடி விளையாடும் இவ் அற்புதமான பாரம்பரிய விளையாட்டு இன்று அழிந்த விளையாட்டாகிவிட்டது.



மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் பெண்களுக்கான மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்றதன் மூலம் பாடசாலை வரலாற்றிலே பெரும் சாதனையைப் படைத்துள்ளது. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. இந்த வருடத்திலே முதன் முதனாக களமிறங்கிய வீராங்கனைகளுக்கு வெற்றிமணியின் பாராட்டுக்கள்.

## விளையாட்டும் சமூக ஒழுக்கமும்

**செல்வி. சு. லாவண்ஜா**
ஆசிரியை
யா/ யாழ் இந்துக் கல்லூரி

சமூகம் எனும் பொழுது தனிமனிதன், குடும்பம் என்பவற்றின் ஒன்றிணைந்த செயற்பாடே சமூகம் ஆகும். இங்கு சமூக அசைவு எனும்போது தனிநபர் அல்லது குடும்பம் தனது குறிப்பிட்ட நிலையிலிருந்து முன்னோக்கியோ அல்லது பின்நோக்கியோ அசைவதே சமூக அவை எனப்படுகின்றது. இவ்வாறான சமூக அசைவு நடைபெறுவதற்கு ஒரு காரணியாக விளையாட்டு காணப்படுகின்றது.

ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் பங்குபற்றும்போது ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து ஒழுக்கமாக விளையாடப் பழகிக் கொண்டார். இவ் வாறு விளையாடுகின்றபோது, விதிகளை அவன் மீறி நடக்கும்போது அவனுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. எவ்வாறு அவன் விளையாட்டில் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து விளையாடப் பழகுகின்றானோ அதேபோல அவன் தனது சமூகத்தின் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்து சிறந்த சமூகப் பிரஜை யாகத் திகழ்வான். இவ்வாறு ஒவ்வொரு வரும் விளையாட்டில் பங்கு கொள்வதன் மூலம் சிறந்த ஒரு சமூகத்தையும் நல்ல பண்புள்ளவர்களையும் உருவாக்கக் கூடியதாக அமையும்.

மேலும் ஒருவர் விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, தலைமைத்துவம், மற்றவர்களை மதித்து நடத்தல், புரிந்துணர்வு, சகோதரத்துவம் போன்ற பல பண்புகள் உருவாகும். இப்பண்புகள் ஒரு சிறந்த சமூகம் உருவாக வழிவகுக்கின்றன. சமூகத்தில் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு, மற்றவர்களை ஏற்றுக்கொள்ளல், மற்றவர்களை மதித்துநடத்தல் போன்ற பண்புகள் உருவாவதால் சமூகம் ஓர் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு வழிவகுக்கும்.

விளையாட்டுச் செயற்பாடுகள் பல சமூகங்களை இணைக்கும் ஒரு பாலமாகக் காணப்படுவதுடன் இவ் சமூகத்தை இணைத்து பெரியதொரு சமூகத்தை உருவாக்கக்கூடியது. அதாவது விளையாட்டுப் போட்டிகள் எல்லா சமூகங்களிடையேயும் நடைபெறுகின்றன. இவ்வாறு சமூகங்களிடையில் போட்டிகள் நடைபெறுகின்றபோது அவர்களிடையே பல்வேறு தனித்துவப் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. இவ் விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் உயர் சமூகம், தாழ் சமூகம், மத்திய சமூகம் என சமூக வேறுபாடுகள் விளையாட்டின் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்யப்படுகின்றது.

உதாரணமாக – ஆரம்ப காலங்களில் அமெரிக்காவில் கறுப்பின மக்கள் தாழ் சமூகத்தினர் என ஒதுக்கி வைக்கப்பட்டனர். ஆனால் விளையாட்டுத் துறையானது இன்று வளர்ச்சியடைந்ததால் அமெரிக்காவில் மெய்வல்லுனர் போட்டியில் அதிகளவில் கறுப்பினத்தவரே பங்குபற்றுகின்றனர். அவர்கள் பங்குபற்றினாலும் அவர்களை ஒதுக்கி வைக்காமல் உயர்ந்த சமூகம் எனக் கருதப்பட்ட வெள்ளை இனத்தவரும் தாழ்ந்த சமூகத்தினரான கறுப்பினத்தவர்களும் ஒன்று சேர்ந்த நாட்டுக்காகப் பாடுபடுவதைக் காணலாம்.

போட்டியில் ஒரு வீரர் பங்குபற்றி அதில் தோல்வியடைகின்றபோதும் அதனை ஏற்கப் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்கின்றான். இதனை சமூகமயமாதல் எனவும் குறிப்பிடலாம். இவ்வாறு அவன் பழகிக் கொள்வதால் வாழ்க்கையில் ஏற்படும் இழப்பு, தோல்வி என்பவற்றைத் தாங்கிக் கொள்கின்றான். இவ்வாறு விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் இவற்றைப் பெற்றுக்கொள்ளாதிருந்தால் அவன் வாழ்க்கையில் தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்களில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவான் அல்லது மனநோய்களுக்கு ஆளாகுவான். இதனால் சமூகம் பின்தள்ளப்பட்டுவிடும். இவற்றை விளையாட்டுக்கள் நிவர்த்தி செய்து சமூகத்தை முன்னோக்கித் தள்ளுகின்றது. விளையாட்டு வீரன் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தலைமை தாங்கிச் செயற்படுவதனால் சமூகத்தையும் சிறந்த முறையில் தலைமை தாங்கி நடாத்திச் செல்கின்றான். விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றபோது சடுதியாக சில முடிவுகளை எடுக்கவேண்டிய ஏற்படும்.

உதாரணமாக : கோல் அடிப்பதற்காக காற்பந்தாட்ட வீரர் ஒருவர் பந்தை வைத்துக்கொண்டு எந்த திசையில் அனுப்புவது எனக் கணப்பொழுதில் தீர்மானித்தல். அதன்படி செயற்படுகிறான்.

இவ்வாறு உடனடியாகச் சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்குப் பழகிக் கொள்கின்றான். இதேபோல சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்மானங்களை எடுக்கப் பழகிக் கொள்கின்றான்.

இவ்வாறான ஒரு விளையாட்டானது சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் அது உயர் நிலையை அடைவதற்கும் சமூகங்களுக்கிடையிலான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும் சமூகப் பாகுபாடுகளைக் களையவும், சமூகத் தலைமைத்துவத்தை ஏற்கவும் உறுதுணைபுரிகின்றது. இவ்வாறு சமூக அமைப்பின் விளையாட்டானது செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது

☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அரங்கம்




தாய் மண்ணில் மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகின்றோம்.

யேர்மனியிலிருந்து

அமரர் அருந்தவராஜா நிவேதன் நினைவாக...

Mr. Arunthavarajah
Krefeld-Germany.

49+2151 39 73 83


# யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலய வரலாறு

இலங்கையின் மணிமுடியாம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் அயல்நிலை கிராமமாக அமைந்துள்ளது. கொட்டடியாகும். இக்கிராமத்திற்கு கொட்டடி எனும் பெயர் வரக்காரணமாக அமைந்தது. அதன் அமைவிட மாகும். எழுத்து மூலச் சான்றுகள் இன்றி இப்பிரதேச மக்களின் செவிவழிக் கதைகள் மூலம் அறியப்படு வதாவது,

கோட்டையடிப் பிரதேசத்தில் அமைந்தபடியால் 'கோட்டையடி' எனும் சொல் காலப்பகுதியில் மருவி கொட்டடி என வந்தது எனவும், பண்டைக் காலத்தில் பண்ணைக் கடலை அண்டிய இப்பிரதேச மக்கள் தோணிகள், மரக்கலம் மூலம் பொருட்களை ஏற்றி




இறக்கினார்கள் எனவும் அவ்வேலைகளில் பெண் தொழிலாளர்களை ஈடுபடுத்தி கல், மண் போன்ற பொருட்களை "கொட்டடி கொட்டடி", எனக் கூறியதால் இப் பெயர் அமைந்தது எனச் சிலரும் ஊகிக்கிறார்கள்.

இக்கிராமத்தை அக்காலத்தில் C.S. கந்தையாச் செட்டியார் என்பவரே (C.S.K) நிர்வகித்து வந்தார். அவருக்கு நமச்சிவாயச் செட்டியார் எனும் மகன் ஒருவர் இருந்தார். அவர் இங்குள்ள மக்களுக்கு பெருமளவு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இதனால் இப்பிரதேச நிலச்சுவாந்தராகவும், வளமும், புகழும் மிக்கவராகவும் விளங்கினார்.

1928இற்கு முன் வெறும் பனை ஓலையால் வேயப்பட்டு கிறிஸ்தவ மிஷனரியால் நிர்வகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலை அக்காலப்பகுதியில் இப்பிர தேசத்தில் ஏற்பட்ட மதப்பூசல் காரணமாக எரிக்கப்பட்டது.

இதனால் இப்பிரதேச சிறார்கள் கல்வியை மேம் படுத்துமுகமாக 1928இல் நமசிவாய செட்டியாரால் "நமசிவாய வித்தியாலயம்" ஸ்தாபிக்கப்பட்டது. இக் காலப்பகுதி தொடக்கம் 1961இல் அரசாங்கம் இப்பாட சாலையைப் பொறுப்பேற்கும் வரை சகல பரிபாலன மும் நமசிவாயச் செட்டியாராலேயே மேற்கொள்ளப் பட்டது. இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.வீர கத்திச் சட்டம்பியார் விளங்கினார். அவரைத் தொடர்ந்து திரு.கனபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமை யாற்றினார். இவர்களைத் தொடர்ந்து திரு.படைவீர சிங்கம் என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார்.

1961இல் அரசாங்கம் பாடசாலையைப் பொறுப் பேற்றபோது தேக்க மரப்பலகையால் அடைக்கப்பட்ட ஒரு பெரிய மண்டபத்திலேயே வகுப்புக்கள் நடை பெற்றன. இக் காலப்பகுதிகளில் அயலில் உள் சகல மாணவர்களும் தமது ஆரம்பக் கல்வியை இப்பாட சாலையிலேயே பயின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1961வரை பாடசாலை அதிபர் 'தலைமை ஆசிரியர்' எனவும், ஆசிரியர் – 'பெரிய வாத்தியார்' எனவும், ஆசிரியைகள் பாசமாக 'அக்கா' எனவும் அழைக்கப் பட்டனர். தொடர்ந்த காலப்பகுதிகளில் அதிபர்களாக இருந்த திரு.வி. செல்லத்துரை, திரு.த. ஆறுமுகம், திருமதி அ.துரைசிங்கம் என்போர் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளனர்.

பாடசாலை ஆரம்ப காலங்களில் தரம் –8 வரை மட்டுமே உள்ள பாடசாலையாக இயங்கி வந்தது. பின் வந்த காலங்களில் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி புகட்டும் பாடசாலையாக மாற்றப்பட்டு தற்போது வகை II ஐச் சேர்ந்த பாடசாலையாக விளங்குகிறது. இப்பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்ற மாணவர் உயர்தரக் கல்விக்காக எமது அயற் பாடசாலைகளான யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் கல்வி கற்கச் செல்கிறார்கள்.

1991இல் அதிபராகக் கடமையேற்ற திரு.கு. சண் முகநாதன் அவர்களால் பாட சாலைக் கீதம் இயற்றப்பட்ட துடன், பாடசாலை இலச் சினையும் வடிவமைக்கப் பட்டு "சாந்துணையும் கல்" என்ற வாசகம் பொறிக்கப் பட்டது. இவரது காலத்தி லேயே பாடசாலைக் கொடி யும் மாணவிகளுக்கான கழுத்துப்பட்டியும் நீலம், வெள்ளை நிறம் கொண்ட தாக வடிவமைக்கப்பட்டது.

தொடர்ந்து மாணவரை விளையாட்டுத் துறையில் உள்ளீர்க்கும் நோக்குடன் பிரதி அதிபர் ந. சிவராஜாவுடன் இணைந்து சத்தியம் (சிவப்பு), சிவம் (மஞ்சள்), சுந்தரம் (பச்சை) என மூன்று இல்லங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன் அவை முறையே உண்மை, நன்மை, அழகு எனப்பொருள் பொதிந்த சொற்களாக அமைந்தமை சிறப்பிற்குரியது. அத்துடன் இவரால் பாடசாலைக்கு என ஒரு கலையரங்கு அமைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இக் காலப்பகுதியில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதன் விளைவாக மாண வர்கள் தமிழ்த்தினப் போட்டிகளிலும், கோட்டமட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பான சாதனைகளை நிலைநாட்டினர். இச்சாதனைக்கு ஊன்று கோலாக இருந்தஅதிபர், பிரதி அதிபர், சமகாலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் பங்களிப்பு போற்று தற்குரியது.

2001ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற திரு.சு. நடராஜலிங்கம் அவரது அயராத முயற்சியும் வெளியகத் தொடர்புகளில் அவரது பங்களிப்பும் காரணமாக இன்று அழகும் பொழிவும் பெற்று விளங்கும் நூலகம் அமையப்பெற்றமை வரப்பிரசாதமாகும்.

இவரது வெளியகத் தொடர்பின் காரணமாக யுனிசெவ் நிறுவன பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தில் எமது ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டு முற்றம் அமைத்துத் தந்ததுடன், அம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கற்றல் உபகரணங்களையும் வழங்கியது. இந் நிறுவனத்திலிருந்து எழுத பாடசாலைகளுக்கு இவ் உதவியைப் பெற்றுத்தர முன்னின்ற அனைவரையும் இந்நேரம் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

விளையாட்டுத் துறையிலும், ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் ஏனைய பிரபல பாடசாலை மாணவர் களுடன் போட்டிபோடக்கூடிய நிலையில் வளர்ச்சி பெற்று விளங்குகின்றனர்.

எமது பாடசாலை வளர்ச்சியில் இன்னுமொரு பரிணாமத்தை ஏற்படுத்தியது JICA செயற்திட்டத்தில் 10 பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாக 2006இல் தெரிவு செய்யப்பட்டமையாகும். இதன் பின் எமது பாடசாலை வளர்ச்சியில் 5S முறையிலான முகாமைத்துவம், ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்பறை, அழகான பச்சைத் தோட்டம், கண்டறியும் முறையிலான விஞ்ஞானக் கற்பித்தல், குழுநிலைச் செயற்பாடு, பிள்ளைகளைக் கவரும் முறையிலான ஆரம்பப்பிரிவு வகுப்பறை கற்பித்தல் என பல வளர்ச்சிப் படிகளைக் கண்டுள்ளது.

2010ம் ஆண்டு யூன் மாதம் 16ம் திகதி திரு.ப. கணேசன் புதிய அதிபராகப் பதவியேற்று கடமையாற்றி வருகின்றார்.

**சாதனைகள்**

2010ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு நடைபெற்ற சிந்துநடைக்கூத்து காத்தவராயன் நாட கத்தில் இப்பாடசாலை வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை யும் பெற்று சாதனை நிலைநாட்டியது.

2011ம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணப் பாட சாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் இப்பாடசாலை மூன்று பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச்சாதனை படைத்தது.

**செல்வன் ஜெ. அபிமன்**

100மீற்றர் ஓட்டம் – தங்கப்பதக்கம் (1ம் இடம்)

200மீற்றர் ஓட்டம் – வெள்ளிப்பதக்கம் (2ம் இடம்)

**செல்வன் க. தமிழரசன்**

நீளம் பாய்தல் – வெள்ளிப்பதக்கம் (3ம் இடம்)

இப்பாடசாலையில் சிறிய துண்டுநிலம் கூட விளையாடுவதற்கு இல்லை. விளையாட்டுப் போதனா சிரியரும் இல்லை. இந்நிலையிலேயே வெற்றிகளைக் குவித்துள்ளமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.



உன்னிடம் வம்பளப்பவன் உன்னைப்பற்றியும் வம்பளப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு பல்கலைக்கழகம் (சட்டபீடம்) மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம் தேசியமட்டத்தில் நடாத்திய கட்டுரைப்போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட கட்டுரை



சிவாணியா ரவிந்தா
க/கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி, நாவலப்பிட்டி

# கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் எமக்கு வேண்டும். ஏன்?

கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் எமக்கு வேண்டும். ஏன்? என்பதே இக்கட்டுரையின் தொனிப் பொருளாகும். "சுதந்திரமாகப்பிறந்த மனிதன் சுதந்திரமாகவே வாழ வேண்டும்" என்ற கருத்தை வெளியிட்ட பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த ஜீன் ஜக் ரூஸோ என்ற தத்துவவாதியின் கருத்துக்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவே வாழ விரும்புகின்றான். எமது நாட்டில் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் கூட அடிப்படை மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடுகையில், அத்தியாயம் மூன்றில் உறுப்புரை ஐந்தில் கருத்துத் தெரிவிக்கும் உரிமை, பேச்சு உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு எனக் குறிப்பிடப்படு கின்றது. இதிலிருந்து சுதந்திரம் ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

உலகத்தில் ஒரு மனிதனைப் போல் இன்னொரு மனிதன் இருப்பதில்லை. உருவத்தில், குணத்தில், நிறத்தில் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு உண்டு. அதேபோல் ஒவ்வொருவருக்கும் அதாவது துள்ளித் திரியும் சிறுவர்கள் முதல் பல்லுப்போன பெரியவர் வரை தமது கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் உண்டு. ஆனால் வீட்டிலிருந்து பாடசாலை வரை பல சந்தர்ப்பங்களில் சிறுவர்களாகிய எங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேசும் சுதந்திரமும் இல்லாமற் போய்விடுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் எமது உரிமை முற்றுமுழுதாகப் பறிபோய்விடுகின்றது என்பது நீங்கள் அனைவரும் அறிந்த உண்மையே.

"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" என்று பல மேடைகளில் பேச நான் கேட்டுள்ளேன். அப்படிக் கூறுபவர்கள் எமது கருத்தை ஏற்றுக்கொள்வதும் இல்லை. எமது பேச்சுக்கு சுதந்திரம் அளிப்பதும் இல்லை. வீட்டில் கூட பல சந்தர்ப்பங்களில் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது "நீ சின்னப்பிள்ளை உனக்கு என்ன தெரியும்" என்று எமது வாயை அடைத்து விடுகின்றனர். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் வீட்டில் எனது கருத்துக்கு எனது பெற்றோர் செவி சாய்க்காத சந்தர்ப்பமும் உண்டு. ஒரு நாள் எனது பெற்றோர் குடும்ப வருமானம் பற்றி கதைத்துக்கொண்டிருந்த வேளையில் வரவுக்கு மிஞ்சிய செலவு காரணமாக எப்படி இதைச் சமாளிப்பது என்று குழம்பி இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டபோது நான் அடுத்த மாதத்தில் இருந்து முழுவதையும் அதாவது வருமானம் முழுவதையும் என்னிடம் தரும்படியும் செலவுகளை அதற்கு ஏற்ப சமாளித்து காட்டுவதாகவும் எனது கருத்தை நான் வெளியிட்டேன். அதற்கு எனது பெற்றோர் உனக்கு என்ன தெரியும்? நீ சின்னப்பிள்ளை என்று எனது கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. அதே போல் வகுப்பறையிலும் ஒழுங்கு என்ற போர்வையில் சத்தமும் இல்லாமல் மாணவர் மூச்சுவிடாமல் நிசப்தமமாக இருக்கவேண்டும் என்று பேசுவதற்கே சுதந்திரம் இல்லை.

சிறுவர்களாகிய எங்களை மதித்து சுதந்திரமாக பேசவிடுவதற்கான கலாசாரமே கிடையாது. நாங்கள் துணிச்சலாக கேள்வி கேட்கமுடியாது. கேள்வி கேட்பதன் மூலமே ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி அடைகின்றது என்பதை ஏன் பெற்றோர்கள் உணர்வதில்லை. வீட்டில் கிடைக்காத சுதந்திரம் பாடசாலையிலும் கிடைப்பதில்லை. சிறுவர்களை கேள்வி கேட்க பெற்றோர்களும், பெரியோர்களும் விடுவதில்லை. கேள்வி என்றால் எதிர்ப்பு என்று பொருள். எதிர்ப்பு என்றால் குடும்பமே ஆட்டம் கண்டுவிடும் என்ற பயம். பெரியவர்களிடம் மரியாதை என்றால் கேள்வி கேட்கக்கூடாது என்ற ஒரு நிலை.

"மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது", "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்று எமது முன்னோர் சொன்ன பழமொழிகளை நோக்கும்போது இந்த சமுதாயத்தில் பெற்றோர்களும் சரி, ஆசிரியர்களும் சரி எமது கருத்தை தெரிவிக்கும் சுதந்திரத்தையும், பேசும் சுதந்திரத்தையும் மறுப்பதற்கான காரணம் என்ன? எமக்குள்ளும் எத்தனையோ கருத்துக்கள் விடயங்கள் புதைந்து கிடக்கின்றன. அதை அவர்கள் வெளிக் கொண்டுவர சந்தர்ப்பம் தரவேண்டும்.

கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் ஏன்? எமக்கு வேண்டும். நாளை நாட்டை ஆளப்போகும் எமது கருத்துக்கும் பேச்சுக்கும் சமுதாயம் செவிசாய்க்கும்போது ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் திறமை, ஆற்றல் என்பன வெளிக்கொண்டுவரப்படும்போது நல்ல ஒரு நாட்டை கட்டியெழுப்பலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இருபது வருடங்களுக்கு முன் இதே வயதில் இருந்த மாணவ பருவத்தினருக்கும், இன்று அதே வயது மாணவ பருவத்தினருக்கும் கிடைத்த, கிடைக்கின்ற கல்வி கற்றல் தொடர்பான வசதி வாய்ப்புக்கள் இன்று அதிகம். அதற்கேற்ப எமது வயதினரின் சிந்தனை ஆற்றல் அறிவுத்திறன் அதிகரித்த நிலையிலேயே உள்ளது என்பதை யாரும் மறக்கமுடியாது.

அப்படியிருக்கும்போது ஆக்கபூர்வமான எமது கருத்துக்களையும் சமுதாயம் ஏற்றுக்கொண்டு நல்ல ஒரு உலகை வளமான ஒரு உலகை கட்டியெழுப்ப சமுதாயம் அதாவது சமூகம் முன்வரலாம் தானே. நாளைய உலகில் நாங்கள் தலைநிமிர்ந்து நடப்பதற்கும் பிரச்சினைகளின்போது சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கும் பூகோள கிராமமான இவ்வுலகத்தில் சகல துறைகளிலும் நேரடியாக, மறைமுகமாக தாக்கத்தினை விரைவான மாற்றங்களை நாங்கள் சமாளிக்கும் திறனையும் காலத்துக்கு ஏற்ற நிலையில் எம்மை மாற்றி சமூகத்துடன் ஒத்து வாழ்வதற்கான ஒரு நிலையை உருவாக்குவதற்கு எமது கருத்துக்கும், பேச்சுக்கும் சுதந்திரம் வழங்கும்போது அந்த ஆற்றல் எம்முள் வளரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் எமக்கு ஏன் அவசியம் என்பதைப் பற்றிய ஒரு கவிதை.

சுதந்திரமாகப் பிறந்த நாம் சுதந்திரமாகவே
வாழ வேண்டும்
அதற்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம்
எமக்கு வேண்டும்!
ஏன் வேண்டும்? கருத்துத் தெரிவிக்க
சுதந்திரம் எமக்கு?
பிரச்சினைகளின்போது சிறந்த தீர்மானம் எடுப்பதற்கும்
எமது மேலதிக ஆற்றலை வளர்ப்பதற்கும்
எமது மேலதிக ஆற்றலை வளர்ப்பதற்கு!

இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழும் சிறுவர்களாகிய எமக்கு கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் கட்டாயம் வேண்டும். அவ்வாறான சுதந்திரம் எமக்குக் கிடைக்குமானால் என்றுமே எம் வாழ்வில் வசந்தம் தான். மனித உரிமைகளுக்கான கற்கை நிலையங்கள் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் எமக்கு ஏன் வேண்டும்? என்பதைப் பற்றி போதிக்கின்றன. சிறுவர்களாகிய எமக்கும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் வழங்க வேண்டியது உங்களது தலையாய கடமையாகும்.


## யேர்மன் தழுவிய ரீதியில் யேர்மனிய பிரதமரால் நடாத்தப்பட்ட ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் நோற்றைன் வெஸ்பாலின் மாநிலத்தில்

# தமிழ் மாணவிக்கு முதலிடம்!



நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இவ்ஆய்வுக் கட்டுரைப் போட்டி யேர்மன் தழுவிய ரீதியில் யேர்மனிய பிரதமரால் நடாத்தப்படுகிறது. இதில் 12ம் வகுப்புக்கான ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் ஷரீகா சிவநாதன் நோற்றைன் வெஸ்பாலின் மாநிலத்தில் பங்கு கொண்டு 1ம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய கட்டுரை **தொப்பியின் கீழே ஒரு நகரம் எறியப்படுவதற் காகவா?** (Unterm Deckmäntelchen- Ein Entwurf der stadt zum verwerfen? எனும் தலைப்பிலே பாடசாலை வரலாற்றில் நடைபெற்ற ஒரு சர்ச்சைக்குரிய விடயத்தை ஆய்வு செய்து எழுதியுள்ளார். இப்போட்டியில் 1152 பேர் யேர்மனியின் நோற்ரைன் வெஸ்பாலின் மாநிலத்தில் பங்கு கொண்டனர். 78 மாணவர்களின் கட்டுரை சிறந்த கட்டுரைகளாக தெரிவுக்குள்ளாகின. அதில் ஷரீகா சிவநாதன் எழுதிய கட்டுரை சிறந்த கட்டுரைகளில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவருக்கான மாநிலப்பரிசை நோற்றையின் வெஸ்பாலின் இளையோர் கலை கலாச்சார விளையாட்டிற்குப் பொறுப்பான மாநில முதல்வர் ute schäfer பொன்னில் வழங்கிக் கௌரவிக்கின்றார். இந்த நிகழ்வில் பேராசிரியர் (prof. Dr Hans Walter Hutter, fernshehmoderator Ralph Caspers) கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. இவருடைய இந்த ஆய்வுக் கட்டுரை (Geschichte haus Bonn இல் ஆவணப்பதிவுப் பகுதியில் வைக்கப்பட வுள்ளது. அடுத்த சுற்று யேர்மன் தழுவிய ரீதிக்காக பேளின் நகருக்குச் சென்றுள்ளது. அந்தப் பரிசும் இவருக்கு கிடைக்க வாழ்த்துவோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மொழியும் பண்பாடும் 7

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர். புலவர்கள் இயற்றும் இலக்கியம் மொழியையும் பண்பாட்டையும் காவிச் செல்லும் ஊர்தி எனினும் பொருந்தும். ஒரு காலத்து மொழிநடையையும் பண்பாட்டு நிலையையும் அது வெளிப்படுத்தி நிற்கும். புலவனுடைய புலமைத் திறனும் கற்பனையாற்றலும் இதனைக் காட்சிப்படுத்திக் காட்டும். இதனால் காலம் கடந்தாலும் இலக்கியம் சுட்டும் காட்சியை எம்மால் இன்றும் சொல்லோவியங்களிலே காணமுடிகிறது. இப்பண்பினைக் கம்பனின் ஒரு செய்யுளில் காண்பது தெளிவைத் தரும்.



கம்பராமாயணம் என்னும் பேரிலக்கியம் மொழியையும் பண்பாட்டையும் நிலைபெறச் செய்த பெருமையைப் பெற்றுள்ளது. ஏறக்குறையப் பன்னீராயிரம் செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் ஒரு செய்யுள் மூலமே இதனை நன்கு விளக்க முடியும். கம்பராமாயணம் பாடிய கம்பரின் செஞ்சொற் கவிதைகளின் ஆற்றல் அளவிடற்கரியது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாவது போல ஒரு செய்யுளில் இதனை நன்கு உணர்த்தலாம். எளிதான விளக்கத்திற்காகப் பாடல் இங்கு பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்
சேய் உலகு ஆள்வது சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்
தீயவை யாவையினும் சிறந்த தீயாள்".

(கைகேயி சூழ்வினைப்படலம் : 14)

தசரதனிடம் அவனுடைய விருப்பத்திற்குரிய இளைய மனைவி கைகேயி இரண்டு வரங்களைக் கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. பாடலில் ஒரு பண்பாடு சொற்கள் மூலம் பேணப்பட்டுள்ளது. ஏற்கனவே தசரதன் தருவதாகக் கூறியிருந்த வரங்களையே இப்போது கேட்டுள்ளான். 'ஏய வரங்கள்' என்ற சொற்றொடர் இதனைத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

கைகேயி அடுத்து இரண்டு வரங்களையும் வரிசைப்படுத்துகிறாள. ஒன்றினால் என் சேய் உலகாள்வது. சீதை கேள்வன் ஒன்றால் போய்வனம் ஆள்வது. முதல் வரம் கைகேயி பரதனின் தாயாக நின்று கேட்கும் வரம். 'என் சேய்' என்ற தொடர் கைகேயி பரதனைப் பெற்றதாய் என்பதை இனம்காட்டி நிற்கிறது. தான் பெற்றமகன் உலகத்தை ஆளவேண்டும் என்பது கைகேயியின் எண்ணமாக இருக்கிறது. அயோத்தியை ஆளும் பொறுப்பைப் பரதன் பெற்றால் கேகய நாட்டு ஆட்சி உரிமையுடன் ஒரு பரந்துபட்ட சாம்ராச்சியத்தை ஆளுமை உரிமையை அவன் பெறுவான். உலகம் அறிந்த மன்னனாகப் புகழ் பெறுவான். வானோர் உலகை விட மேம்பட்ட உலகம் எனப் புகழ்பெற்ற அயோத்தி நகரம் அமைந்த கோசல நாட்டின் மன்னனாகப் பரதன் விளங்கவேண்டும் என்பதற்காக முதல்வரமாக கைகேயி அதனைக் கேட்டாள்.

இரண்டாவது வரத்தால் சீதையின் கணவனான இராமன் காடாள வேண்டுமெனக் கேட்கிறாள். "சீதை கேள்வன்" என இராமனைக் கூறுவதன் மூலம் அவன் மீது தான் கொண்டிருந்த அன்பை அகற்றி விடுகிறாள். இப்போது இராமன் சீதைக்கே நெருங்கிய உறவுடையவன். அவன் காட்டிற்குப் போகும்போது தன் காதல் மனையாள் சீதையையும் கூட்டிச் செல்வான் என்பதையும் குறிப்பால் நன்குணர்த்திவிடுகிறாள்.

பரதன் எவ்வித இடையூறும் இன்றி கோசல நாட்டை ஆள்வதற்கு இராமனை வனம் ஆளச் செய்வதே சிறந்த வழியெனக் கைகேயி தீர்மானித்தாள்.

இந்த இரண்டு வரங்களையும் கேட்கும்படி கைகேயியைத் தூண்டியவள் கூனியே. பரதன் முடிசூடச் செய்ய என்ன வழியெனக் கைகேயி கேட்டபோது கூனியே வழி சொல்கிறாள். தசரதன் சம்பரனோடு போர் செய்தபோது தேரைச் செலுத்தித் தசரதனை வெற்றிபெறச் செய்தவள் கைகேயி. அப்போது அவளுக்கு இருவரம் தருவதாகத் தசரதன் வாக்களித்திருந்தான். அந்த இரண்டு வரங்களையும் பரதன் ஆட்சிப் பொறுப்பைப் பெறும்வண்ணம் உருவமைத்துக் கொடுத்தவள் கூனியேயாகும். அதனைக் கம்பன் பாடல் வருமாறு கட்டமைத்துள்ளது.

"இரு வரத்தினில் ஒன்றினால் அரசுகொண்டு இராமன்
பெரு வனத்திடை ஏழ்இரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி ஒன்றினால் செழுநிலம் எல்லாம்
ஒரு வழிப்படும் உன்மகற்கு உபாயம் ஈது என்றாள்"

இந்த ஒழுங்கிலேயே கைகேயி வரத்தைத் தரசதனிடம் பெற்றாள். அன்போடு வளர்த்த இராமனைப் பதினான்கு ஆண்டு காட்டிற்கு அனுப்பத் துணிந்த கைகேயி தீயவையாவினும் சிறந்த தீயாளாக மாறினாள். தாய்மைப் பண்பையே தொலைத்த அவளைவிடத் தீயவள் உலகில் யாருமே இருக்க முடியாது. பெண்மைக்கே உரிய சிறந்த பண்பு நலத்தையே உதறிய கைகேயியை உலகமே பழி தூற்றியது. கணவனையே மரணத்தைத் தழுவவைத்த கைகேயி பெண்மையின் வரலாற்றிலேயே சிறந்த தீயாள் ஆகி இன்று வரையும் நிற்கிறாள்.

# செம்மொழி என்றால் என்ன?



– கவிஞர் வி.கந்தவனம்

மேல்வாரியாக செம்மொழி என்றால் செம்மையான மொழி என்று பொருள். செம்மையான மொழி என்பதற்கு சீரான மொழி, அழகான மொழி, தூய்மையான மொழி, பெருமைக்குரிய மொழி என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

இவற்றுடன் இந்நாட்களில் செம்மொழி என்ற சொல் Classical Language என்ற ஆங்கிலப் பதத்திற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆங்கிலத்தில் Classical Language என்றால் தொன்மையானதும் தனித்துவமானதும் பரந்த இலக்கிய வளமுள்ளதுமான மொழி என்று பொருள் கொள்ளப்படுகின்றது. அவ்வகையில் கிரேக்கமும் இலத்தீனும் செம்மொழிகளாகக் கருதப்பட்டு வந்தன. காலப்போக்கில் சீன மொழி, அரேபிய மொழி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியனவும் செம்மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தமிழ் தொன்மையான மொழி. இன்ன காலத்திலே தான் தோன்றியது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு அது தொன்மையானது. எந்த ஒரு மொழியும் ஒரு குறிப்பிட்ட நாளில் தோன்றியிருக்க முடியாது. மக்கள் கூட்டம் ஒன்றின் கருத்துவெளிப்பாட்டின் ஒலிவடிவமே மொழி. அது காலத்திற்குக் காலம் பல வளர்ச்சிப்படிகளோடு தொடர் புடையது. உதாரணமாக தொடக்க காலத்தில் ஒலிவடிவத்தில் இருந்திருக்கும். பின்னர் அது எழுத்துவடிவம் பெற்றிருக்கும். பின்னர் இலக்கணம் வகுக்கப் பட்டிருக்கும்.

தமிழில் இப்போதுள்ள நூல்களுள தொல்காப்பியமே தொன்மையானது. தொல்காப்பியம் எப்பொழுது தோன் றியது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது போனாலும் அறிஞர் பலரும் தொல்காப்பியம் கிறிஸ்துக்கு முன் 5ம் நூற்றாண்டளவில் தோன்றியிருத்தல் வேண்டும் என்பதைப் பொதுவாக ஒப்புக் கொண்டு பேசியும் எழுதியும் வருகின் றனர். கி.மு. 5ம் நூற்றாண்டு கடைச்சங் கத்தின் தொடக்க காலமாகும்.

இவ்வித தொன்மை மட்டுமல்லாது வளமான இலக்கியச் செல்வங்களையும் தமிழ் கொண்டுள்ளது. கி.மு. 500இற்கும் கி.பி. 100இற்கும் இடைப்பட்ட சங்க காலத்தில் அகநானூறு நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய நூல்களும், சங்கமருவிய கால மென்று சொல்லப்படுகின்ற கி.பி. 100 இற்கும் கி.பி 500இற்கும் இடைப்பட்ட காலத்தில் திருக்குறள், நாலாடியார், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி போன்ற சிறந்த நீதி நூல்களும் எழுந்தன. இக்காலத்து பிற்பகுதியிலேயே சிலப்பதி காரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் படைக்கப்பட்டன.

இவ்வித இலக்கியச் செல்வத்திற்குரிய தமிழ்மொழி தனித்துவமாக இயங்கும் தகைமையும் கொண்டது. அதாவது பிறமொழிகளின் உதவியின்றி தானே இயங்கும் வல்லமை உடையது. மலை யாளம், கன்னடம், தெலுங்கு, துளுவம் போன்ற பிற மொழிகளின் தோற்றத்திற்கும் தமிழ்மொழி காரணமாக உள்ளது.

தனித்துவமாக இயங்கக்கூடிய வல்லமையும் தனித்துவமான பாரம்பரியமும் பண்பாடும் செம்மொழித் தகைமைக்கு இன்றியமையாதவை. இவற்றையெல்லாம் ஆய்ந்து அறிந்த அறிஞர் தமிழ் செம்மொழியே என்று ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் இந்திய அரசு 2005ம் ஆண்டுதான் தமிழ்மொழி யைச் செம்மொழியாக அங்கீகரித்தது.

இந்த அங்கீகாரத்தினால் இந்திய மத்திய அரசிடமிருந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு நிதி பெறக்கூடிய வாய்ப் புண்டு. இந்த நிதிவசதி பண்டைய இலக்கியங்களை மீளப் பதிப்பதற்கும் மொழி பெயர்ப்புச் செய்வதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் உதவும்.

தமிழ்மக்கள் தங்கள் மொழியின் பெருமையை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் ஆங்கில மோகமே இன்னமும் ஆட்சி செலுத்துகின்றது. இதனை மாற்றித் தமிழ்ப் பற்றை வளர்க்கவே தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி செம்மொழி மாநாட்டை நடத்தினார்.

**கனேடிய தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனுக்கு வெற்றிமணி பிரதி கையளிக்கப்பட்டபோது...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பிதாமகர் பேராசிரியர் கா. சிவத்தம்பி



பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

புதன்கிழமை (06.07.2011) இரவு ஒன்பது மணியளவில் நண்பர் க.குமரன் தொலைபேசியில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 8.55 அளவில் காலமாகிவிட்டார் என்று கூறினார். மனோன்மணிக்கும் எனக்கும் இது எதிர்பார்த்திருந்த ஒரு செய்திதான். கடந்த 20ஆம் திகதி அவரைச் சென்று பார்த்தோம். அப்பொழுது அவர் தன்னுடைய உயர் பயணத்துக்கு ஆயத்தமாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுவதாகக் கூறினார். கண்கள் கலங்கின. முற்றான பிரிவு என்பது மனிதர்களாகிய எம்மால் தாங்கமுடியாதது. பிரிந்தவர் சாதாரண ஆள் அல்ல. உலகப்புகழ்பெற்ற ஒரு தமிழ் அறிஞர்.

## "டேய் உனக்கு சிவத்தம்பி பிறந்திட்டானடா!"

1932ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் நாளன்று இவர் கரவெட்டியில் பிறந்தார். இவர் பிறக்கும் நாளன்று இவருடைய தந்தையார் யோகர் சுவாமிகளைப் பார்க்கச் சென்றிருந்தார். தந்தையார் பண்டிதர் கார்த்திகேசு சுவாமிகளிடம் சென்றபோது அவர் "டேய்! உனக்குச் சிவத்தம்பி பிறந்திட்டானடா.இங்கை என்ன செய்யறாய். ஓடு வீட்ட." என்று கலைத்தாராம். சிவத்தம்பியின் பெயர் வரலாறு இது.


கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் கொழும்பு ஸாகிராக் கல்லூரியிலும் கல்வி கற்று இலங்கைப் பல்கலைக்கழகத்திலே கலைமாணிப் பட்டத்தினையும் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றார். ஐக்கிய இராச்சியத்தில் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் உலகப்புகழ்பெற்ற பேராசிரியர் தொம்சனுடைய வழிகாட்டலிலே கலாநிதிப் பட்டம் பெற்றார்.

வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பணிசெய்து தகைசார் வாழ்நாட் பேராசிரியராக ஓய்வுபெற்றார். சுவீடன் உப்சாலாப் பல்கலைக்கழகத்திலும் கேம்பிறிட்ஸ் பல்கலைக்கழகத்திலும் புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும் விரிவுரைகள் ஆற்றினார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவரை உயர் ஆய்வுப் புலமையாளராக அழைத்துச் சிறப்புச்செய்தது. அவருக்குக் கிடைத்த புலமை விருதுகள், பரிசில்கள் பல.

தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய விமர்சனம், தமிழ் நாடகம் பற்றி உலகில் எங்கெல்லாம் ஆய்வுகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் பேசும் பொருளாகப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியினுடைய எழுத்துப்பணியும் உடனிருக்கும். இத்தகைய உலகப்புகழுடன் எங்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி. இவர் எங்கள் பிதாமகர்.

இவரிடம் கற்ற மாணவர்களும் கற்காத மாணவர்களும் இவரைத் தங்கள் ஆசிரியராகக் கொள்ளும் வழக்கம் உண்டு. வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இவரிடம் கற்றவர்கள் இருக்கின்றனர். ஆனால் பேராசிரியர் மௌனகுருவோ, சுந்தரம் டிவகலாலாவோ, க.சண்முகலிங்கமோ, கலாநிதி தணிகாசலம் பிள்ளையோ, கலாநிதி மனோன்மணியோ, நானோ அவரிடம் கற்றதில்லை. நாங்கள் எல்லோருமே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள்; பேராசிரியர் கைலாசபதியிடம் கற்றவர்கள். எனினும் நாங்கள் எல்லோருமே பேராசிரியர் சிவத்தம்பியினை எங்கள் ஆசிரியராக நினைந்து வருகிறோம். இது கற்றறிந்த பேரறிஞர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பாகும். இதனாலேதான் இவரை "எங்கள் பிதாமகர்" என்று குறிப்பிடுகிறோம். ஆனால் "எங்கள் பிதாமகரைத்" தமிழ்நாட்டிலுள்ள சிலரும் தங்கள் பிதாமகராகக் கொள்ளும் சிறப்புத்தான் பேராசிரியர் சிவத்தம்பியின் உயர் சிறப்பாக அமைகின்றது. நாம் திசைநோக்கித் தொழுகின்ற வழக்கமுடையவர்களல்லவா? "எந்தரோ மஹானுபாவுலு அந்தரீக்கு வந்தனமு" சொல்லும் மரபுடையவர்கள் நாம். இதிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பியும் தப்பமுடியாது. இப்பொழுது விண்ணை நோக்கித்தான் நாம் அவரைத் தொழவேண்டியுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பியின் பலம் இருந்தபடி இருந்ததுதான். கல்லடிகள் போன்று எத்தனை சொல்லடிகள் விழுந்தாலும் இருந்தபடி இருக்கின்றமை எல்லோராலும் முடியாது.



"காய்த்தமரம் ஆதலினால்
கல்லெறிகள் பட்டவன்நீ
கல்லால் எறிந்தவர்க்கும்
கனியொடுத்த பழமரம்நீ"

என்று இவருடைய மாணவன் பேராசிரியர் சிவலிங்கராஜா தன்னுடைய ஈழத்து இலக்கியச் செல்நெறிகள் என்னும் நூலைப் பேராசிரியருக்குக் காணிக்கையாக்கி எழுதிய கவிதைதான் இச்சந்தர்ப்பத்தில் என்னுடைய நினைவுக்கு வருகின்றது. இவருடைய இருப்பை அசைக்கப் பலர் முயன்றுள்ளமை சிலவேளை வெளியுலகுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இவற்றுக்கு மேலாக நின்று ஒளிர்பவர்கள்தான் பேரறிஞர்கள். "கல்லாநிதிகள்" என்று சொன்னவர்களின் வாய்கள்தான் வெந்தனவேயொழிய, கலாநிதிகள் என்றும் கலாநிதிகளாக இருந்து வருவதற்கு உலகம் இன்றும் சாட்சியாக இருந்துவருகிறது.

பேராசிரியர் சிவத்தம்பியின் புலமையின் அடிநாதம் வரலாற்றுணர்வும் மரபின் பல்வேறு நெளிவு சுளிவுகளை நன்கு இனங்கண்டிருப்பதுமாகும். எந்த விடயத்தை எடுத்து ஆய்வு செய்தாலும் வரலாற்றுணர்வும் மரபின் போக்கும் அந்த ஆய்வினை வழி நடத்திச் செல்வனவாக அமைவதைக் காணக்கூடியதாக இருக்கும். இவற்றுக்குப் பக்கத்துணையாக அமைவது அவர் கையாளும் சொற்களும் சொற்றொடர்களும். தமிழ்நாட்டு இளைஞர்கள் பலர் இவருடைய ஆய்விலே ஈடுபாடு கொண்டமைக்கு இவர் கையாண்ட புதுமையான ஆனால் பொருத்தமான கலைச்சொற்களேயாகும். பேராசிரியருடைய சொற்புனைவு அவருடைய எழுத்துக்களுக்குக் கனதியைக் கொடுத்தது.

பேராசிரியருடைய ஆய்வு வழிகாட்டலிலே கலாநிதிப்பட்டம் பெற்றவர்கள் பேராசிரியர் சி.மௌனகுரு, அமரர் கலாநிதி காரை எஸ்.சுந்தரம்பிள்ளை, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், கலாநிதி செ.யோகராசா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோராவர். ஆய்வுக்குரிய வாசிப்பிலே ஆய்வு மாணவர்களைப் பேராசிரியர் எப்பொழுதுமே வழிநடத்துவார். இந்த வழிநடத்தலில் இடையிலே திசைமாறிப் போவோருமுண்டு. அவர்கள் நீண்டதூரம் சென்று திரும்புவதுண்டு. பேராசிரியர் தமிழ்நாட்டுக்குச் செல்லும்போது அங்கு பெருந்தொகையான ஆய்வு மாணவர்கள் அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பர். இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதொன்றல்ல. அங்குள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து வரும் முனைவர் ஆய்வேடுகளுக்குத் தேர்வாளராக இருப்பதால் பேராசிரியரை அவ்வாய்வாளர்கள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதை நான் அறியக்கூடியதாயிருந்தது. பழமரத்தை நாடிநிற்கும் பறவைகளைப் போல அம்மாணவர்கள் இவர் வரவைக் காத்திருப்பதையும் இவரிடம் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைவதையும் நான் நேரிலே கண்டுள்ளேன்.

பேராசிரியர் சிவத்தம்பிக்கு வாய்ப்பாக இருந்தவை அவருக்கிருந்த கொம்யூனிட்ஸ் கட்சிச்சார்பு, ஆங்கில-சிங்களமொழிப் புலமை. கொம்யூனிஸ்ட் கட்சிச் சார்பு அவர் எழுத்துக்குச் சித்தாந்தத்தை நல்கியது. அதனுடன் ஒரு பரந்துபட்ட நண்பர் கூட்டத்தைக் கொடுத்தது. சிங்களமொழியறிவு அவரை உலகறியவைத்தது. கருத்துக்கள் உதிரிகளாக இருபின் விளங்கிக்கொள்வது இலகுவாயிராது. அவை ஒரு சித்தாந்தப் பின்புலம் கொண்டவையாயின் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும்.இதுதான்அவருடைய எழுத்துக்களுக்கு மிகுந்த மதிப்புக் கிடைக்கக் காரணமாயிற்று. இத்தகைய அறிஞரை நாம் இழந்து நிற்கிறோம். உலகத்தமிழ் அறிஞர்கள் அன்னாரது இழப்பினால் மிகுந்த துயரத்தில் இப்பொழுது ஆழ்ந்திருப்பார்கள். அவருடைய குடும்பத்தினர்கு நாம் ஆறுதல் கூறமுடியாது. அவருடைய ஆன்மா அவருடைய குல தெய்வமாகிய சன்னதி முருகனின் அடிகளிலே அமைதியுற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

# யார் கடவுள்



செல்வி. அருள்பிரகாஸ் சகாயம் பிரியா
ஆசிரியை
க/ கலபொட தமிழ் வித்தியாலயம்,
நாவலபிட்டி.

யார் கடவுள்?
என்ற கேள்விகளுக்கு – பதில்
படைத்தவனே
படைத்தவன் யார்?
என்று தெரியாமல்
பல மதங்கள் பாரினில்
உருப்பெற்றுக் கொண்டிருக்கின்றன
கல்லைக் கண்டாலும் கடவுள்
புல்லைக் கண்டாலும் கடவுள் – என்று
புலம்பிக் கொண்டிருக்கின்றது
மனித இனம்.


ஏய்....!
நீயோ படித்தவன் தானே
பாரினில் நடப்பவைகளை
சில நிமிடம் சிந்தித்துப்பார்
எது உண்மை
எது பொய்யென்று
தெரியும்....!


உனக்கொரு கடவுள்
எனக்கொரு கடவுள் என்றால்
மதங்களின் எண்ணிக்கையே
இவ்வுலகத்தின் எண்ணிக்கையாகுமடா?
உலகம் மட்டும் ஒன்று – ஆனால்
கடவுளும் மதங்களும் ஆயிரமாயிரம்
எது உண்மை.........?
என்று யோசித்தால்
உலகமும் ஒன்று
படைத்த கடவுளும் ஒன்று
என்பதே உண்மை – அந்த
படைத்த கடவுள் யார் என்பதை
உன் வாழ்க்கையில் நீ தேடு – அப்போது
உண்மையெது வென்று
உனக்குத் தெரியும்.....!?

கேட்டால் ஒழிய யோசனை கூறாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை ஓர் உள சமூக நோக்கு





கு. கௌதமன்
வருகைதரு விரிவுரையாளர்,
உளவியல்துறை ,
யாழ். பல்கலைக்கழகம்.

கடந்த நான்கு மாதங்களில் மட்டும் யாழ்ப்பாணத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இது அறிகைக்கு வந்த விபரமாகும். இவற்றைவிட அறிகைக்கு வராத தற்கொலைகளும், தற்கொலை முயற்சிகளும் (Attempt to Suicide) அதிகமாக உள்ளன. உலகில் சராசரியாக 40 செக்கன்களுக்கு ஒரு தற்கொலையும் 3 செக்கன்களுக்கு ஒரு தற்கொலை முயற்சியும் இடம்பெற்றவண்ணமுள்ளன. இலங்கையில் வருடாவருடம் 30000இற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதைவிட பத்து மடங்கானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். உலகில் அதிகூடிய தற்கொலை வீதம் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். யாழ். மாவட்டமும் அண்மைக் காலமாக தற்கொலையில் முன்னணியிலிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இறைவன் தந்த இந்த இன்னுயிதைத் தாமாகவே அழித்துக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒரு விடயமாகும். அதாவது தான் வாழ்வதைவிட இறப்பது மேலானது என்று நினைத்து இதில் ஈடுபடுகின்றனர். தற்கொலை என்பது ஒருவர் நினைத்துத் திட்டமிட்டு தனது உயிரைத் தானாகவே அழித்தலாகும். "தம் வாழ்வுடன் தொடர்புபட்ட மிக முக்கியமான நபர்களுக்கு, தமது நிறைவேற்றப்படாத உளத் தேவைகளைத் தெரியப்படுத்த எடுக்கும் முயற்சியே" தற்கொலையாகும்.

இயலாமை காரணமாக எடுக்கும் இறுதி முடிவாகத் தற்கொலை காணப்படுகின்றது. வாழ்வில் பற்றும் பிடிப்பும் அற்ற நிலையில் பெரும்பான்மையானோர் இதில் ஈடுபடுகின்றனர். தாங்கமுடியாத ஒரு நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்கொலை என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்து தம்மை அழிக்கின்றனர். சுயவன்முறையின் உச்சக்கட்ட வெளிப்பாடே தற்கொலையாகும். அதாவது ஒருவர் தன்னைத் தானே வன்முறைக்குட்படுத்தல் இதுவாகும். இதன் இறுதி விளைவு தற்கொலையில் முடிவடைகின்றது.

வயதானவர்கள், ஆண்கள், பெண்கள், கட்டிளமைப்பருவத்தினர் என்ற வேறுபாடின்றி தற்கொலையில் ஈடுபட்டாலும் கட்டிளமைப் பருவத்தினரே இதில் அதிகம் ஈடுபடுகின்றனர். கட்டிளமைப் பருவத்தில் உணர்ச்சி மேலீட்டால் இதில் ஈடுபடுகின்றனர்.

தூக்குப்போடுதல், அலரி விதையை அரைத்துச் சாப்பிடுதல், தனக்குத்தானே தீ மூட்டுதல், கிருமிநாசினிகளை அருந்துதல், அளவுக்கதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொள்ளல், இரத்த நாளங்களை அறுத்தல், உயரமான இடத்திலிருந்து குதித்தல், ஆறு-குளம்-கடல் என்பவற்றில் பாய்தல்... போன்ற பல்வேறு வழிகளில் தற்கொலைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஈடுபடுபவர்களில் சிலர் இறுதி நேரத்தில் தாம் காப்பாற்றப்படவேண்டும் என்ற எண்ணத்தில் வைத்திய உதவிகளை நாடுகின்ற போதும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் இறுதியில் இறக்கின்றனர். தற்கொலைக்குப் பல்வேறுபட்ட காரணங்களுள்ளன. சிலர் அற்ப காரணங்களுக்காகவும் தமது உயிரை அழித்துக்கொள்ள முனைகின்றனர்.

**தற்கொலைக்கான காரணிகள்**

எதுவித உதவியுமற்ற நிலையில், முற்று முழுதாக நம்பிக்கையிழந்த நிலையில், தனக்கு யாருமே இல்லை, தான் தனித்துப் போய்விட்டேன் என்ற நிலையில் ஒருவர் தற்கொலையில் ஈடுபடுகின்றார். அதற்கான காரணங்கள் வருமாறு :

**1) குடும்ப ரீதியானவை**

கணவன் மனைவியிடையேயான உறவுப்பிணக்குகள் இறுதியில் தற்கொலையில் முடிவடைகிறது. கணவனுக்கு அன்றி மனைவிக்கு வேறு பாலியல் தொடர்புகள் ஏற்படும்போது தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

குடும்ப வன்முறைக்கு (Domestic Violence) உள்ளாகும் பெண்கள், அவ்வன்முறையின் தாக்கம் அதிகதிக்கும்போது தாங்கமுடியாமல் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றனர். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விவாகரத்துப் பெற்ற பெண்களும் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

**2) உறவு ரீதியானவை**

எமது குடாநாட்டில் நடந்த தற்கொலைகளுக்குப் பிரதான காரணமாக "காதல்" உறவு என்பது காணப்பட்டது. அதாவது இளைஞர்கள் பெரும்பாலும் தற்கொலையில் ஈடுபடுவதற்கு காதல் தோல்வியே முக்கிய காரணமாகவுள்ளது. இன்றைய இளைஞர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழத் தலைப்பட்டு காதல் உறவில் ஈடுபடுகின்றனர். மனமுதிர்ச்சியற்ற உடலை மட்டும் மையப்படுத்திய இந்தக் காதலில் சில பெண்கள் தங்கள் உடலையும் பகிர்ந்து கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் விரும்பத்தகாத கர்ப்பம், சட்டவிரோத கருக்கலைப்பு போன்றனவும் ஏற்படுகின்றன. சில பெண்கள் காதலித்தவர்களால் கைவிடப்படும்போது அவமானம், ஏமாற்றம் என்பவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தங்கள் வாழ்வைத் தாங்களாகவே அழித்துக் கொள்கின்றனர். காதலன் அல்லது காதலியால் ஏமாற்றப்பட்டு தற்கொலை செய்து கொண்டவர்களே கடந்த காலாண்டில் அதிகம்.

**3) உளம் சார்ந்தவை**

இலகுவில் மனம் புண்படும் தன்மையுடைய, உளத்தாங்குதிறன் குறைந்தவர்களே தற்கொலையில் அதிகம் ஈடுபடுகின்றனர். அதாவது சிறிய பிரச்சினையைக் கூட தாங்கிகொள்ள முடியாதவர்கள் தற்கொலைக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம். இவர்கள் தமது பிரச்சினைகளை கையாள வழி தெரியாமல், பிரச்சினைச் சுமையிலிருந்து விடுபட தங்கள் உயிரை அழித்தல் ஒன்றே வழி என நினைக்கின்றனர்.

தங்களைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும், நடக்கும் எல்லாப் பிழைக்கும் தம்மையே குற்றவாளியாக நினைப்பவர்களும் இலகுவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

ஒன்றில் அதிகம் எதிர்பார்ப்பு வைத்திருந்து, அது தமக்கு கிடைக்கும் என்று அளவுக்கதிகமாக நம்பிக்கை கொண்டிருப்பது, அது கிடைக்காமற் போகும் சந்தர்ப்பத்தில் ஏமாற்றம் தாங்கமுடியாமல் தற்கொலையை நாடுகின்றனர். இந்த ஏமாற்றம் நபர் சார்ந்ததாகவோ அல்லது பொருள் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

தாங்கமுடியாத கோபத்தில், மற்றவர்களைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் தமக்குத் தாமே தண்டனை வழங்குகின்றனர். காதல் தோல்விகளின் போது மேற்கொள்ளப்படும் தற்கொலைகள் இவ்வகையைச் சார்ந்ததாக இருக்கும்.

தமது அன்பிற்குரியவர்களின் இறப்பினைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் தமது உயிரையும் அழித்துக் கொள்கின்றனர். சிலர் நண்பர்களின் இழப்பினால் பாதிப்புற்று தனிமை தாழாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆளுமை உடையவர்கள் (Sensation seeking personality) பிறரின் கவனத்தைத் தம்பால் ஈர்த்துக் கொள்ளவதற்காக தற்கொலை முயற்சில் ஈடுபட்டு இறுதியில் தாம் காப்பாற்றப்படவேண்டும் என்று விரும்பியும் சிகிச்சை பலனின்றி இறந்து போகின்றனர்.

நண்பர்கள் அதிகம் இல்லாதவர்கள், எப்போதும் தனிமையின் கொடுமையில் வாழ்பவர்கள், உறவுகளால் கைவிடப்பட்டவர்கள் ஈடுபடுகின்றனர்.

பாதுகாப்பின்மை, குற்றவுணர்ச்சி, அவமானத்தை தாங்கிக்கொள்ள முடியாத நிலை, இயலாமை, பிறரால் தான் ஒதுக்கி வைக்கப்பட்டதான தவறாக புரிந்துகொள்ளப்பட்ட உணர்வு, மன இறுக்கம், அடிக்கடி மாறும் மனநிலை, மனச்சோர்வு போன்றவையும் தற்கொலைக்கு காரணமாகின்றன.

**4) சமூகம் சார்ந்தவை**

குறைந்த சமூக உறவாடல் திறன்கள் கொண்டவர்கள் அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். அதாவது சமூகத்துடன் இணைந்து செயற்பட முடியாதவர்களில், தம்மைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திக் கொண்டவர்களில் தற்கொலைக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. சமூகத்தால் களங்கப்படுத்தப்பட்டவர்கள் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

கருத்தேற்றத்தினாலும் (Suggestion) தற்கொலை தூண்டப்படுகின்றது. அதாவது ஒருவர் மற்றவருக்கு தற்கொலை பற்றிய எண்ணத்தை ஊட்டுதல் இதுவாகும். ஒரு நபரால் மட்டுமன்றி திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்கள், செய்தித் தாள்கள் போன்றவற்றாலும் கருத்தேற்றம் நிகழலாம்.

**5) பொருளாதாரம் சார்ந்தவை**

வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு, தமது அன்றாட வாழ்க்கையைக்கூட கொண்டுநடத்த இயலாதவர்கள் அதிகம் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். வறுமையால் தமது குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் போனவர்கள் தம்மை அழிப்பதற்கு முனைகின்றனர்.

கடன் சுமைகள் தாங்கமுடியாமல் சாதாரணமானவர்கள் மட்டுமன்றி மிகப்பெரிய வர்த்தகர்களும் கூட தற்கொலையில் ஈடுபடுகின்றனர். இதன்போது இவர்கள் தமது குடும்பத்தைச் சற்றும் நினைத்துப் பார்ப்பதில்லை.

**6) அரசியல் சார்ந்தவை**

யுத்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், உடமை இழப்புகள் என்பனவும் தற்கொலைக்கு காரணமாக அமைகின்றன. யுத்தத்தின்போது குடும்பத்தை இழந்தவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள், வன்புணர்ச்சிள்ளாக்கப்பட்டவர்கள், நிர்க்கதிக்குள்ளான நிலையில் இருப்பதைவிட இறப்பதே மேல் என தற்கொலையைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

சிலர் தமது இனத்தின் நன்மை கருதி, சில உரிமைகளைப் பெற்றுக்கொள்ள தமது உயிரைத் தற்கொலை மூலம் மாய்த்துக்கொள்கின்றனர்.

இவற்றைவிட தொழில் இழப்பு, பரீட்சைத் தோல்வி, அளவுக்கதிகமான மதுப்போதைப்பொருள் பாவனை, தாங்கமுடியாத உடல் நோய்கள் போன்றனவும் தற்கொலைக்கு காரணமாக அமைகின்றன.

தற்கொலை அபாயம் உள்ளவர்களில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

1) குடும்பம், நண்பர்களுடன் தொடர்பாடலைப் பேணாமல் ஒதுங்கி வாழ்தல், தனிமையை நாடுதல்.
2) அன்றாட கருமங்களில் ஆர்வமின்றி இருத்தல்.
உதாரணம் : கல்வி, தொழில், உணவு உண்ணல்.
3) தற்கொலை பற்றியும், மரணம் பற்றியும் அதிகம் கதைத்தல்.
உதாரணம் : "நான் செத்தால் நல்லது", "நான் செத்தால் ஒருத்தருக்கும் பிரச்சினை இல்லை" எனக் கூறுதல்.
4) ஏற்கனவே தற்கொலை முயற்சில் ஈடுபட்டிருந்தல், தற்கொலை செய்யப்போவதாக நேரடியாக அச்சுறுத்தல் விட்டவர்கள்.
5) மது, போதைப்பொருள் பாவனையில் அதிகம் ஈடுபடல்.
6) குடும்பத்தில் ஏற்கனவே யாராவது தற்கொலை மூலம் இறந்திருத்தல்.
7) எதிர்மறையான சிந்தனைகளைக் கொண்டிருத்தல்.
8) தனிமையில் இருந்து அழுதல், அழமுடியாமல் தவித்தல்.
9) தமது உணர்வுகளை வெளியே காட்டாமல் இருத்தல்.
10) பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்.
உதாரணம் : வன்புணர்ச்சி, கருக்கலைப்பு.
11) சுயவெறுப்பு, குற்ற உணர்வு, வெட்க உணர்வு, தம்மைப்பற்றிய தாழ்வான மதிப்பீடு, சடுதியான ஆளுமை மாற்றங்கள் போன்றன.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்....)*

**உன் இலட்சியத்தை விட அதனை அடையும் வழி முக்கியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பாராளுமன்றத்தில் முதல் தமிழ் பெண்மணி!



கனடாவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ்ப் பெண் வெற்றி!.

இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி உலகத் தமிழினமே ராதிகா சிற்சபேசன் என்ற இலங்கைத் தமிழ்ப் பெண்ணால் பெருமை கொள்கின்றது.

ஆம், கனடாவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் (02.5.2011) ராதிகா சிற்சபேசன் என்ற இலங்கைத் தமிழ்ப்பெண் வெற்றி பெற்றுள்ளார். கனடா பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழ்





எம்.பி. இவர் ஆவார்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஸ்காபரோ ரூச் ரிவர் தொகுதியில் போட்டியிட்ட ராதிகா சிற்சபேசன் 17200 வாக்குகளைப் பெற்று புதிய ஜனநாயகக் கட்சியின் வாக்கு பெற்று மேற்படி தொகுதியில் கணிசமாக அதிகரிக்க வைத்து இத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். கடந்த தேர்தலில் 4900 வாக்குகளை மாத்திரமே இந்தக் கட்சி பெற்றிருந்தது.

இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த, ராதிகா புதிய ஜனநாயக கட்சியின் வேட்பாளராக ஸ்காபரோ ரூஜ் ரிவர் தொகுதியில் (Scarborough Rouge River) போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஸ்காபரோ ரூச் ரிவர் தொகுதியில் போட்டியிட்ட ராதிகா சிற்சபேசன் கனேடிய பாராளுமன்றத்தில் நுழையும் முதல் தமிழராகவும், முதல் தமிழ் பெண்மணியாகவும் சாதனை படைத்துள்ளதுடன், இலங்கைத் தமிழ் மக்களுக்கும் புலம்பெயர் கனேடிய தமிழ் மக்களுக்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இதன் மூலம், இத்தொகுதியில் 23 வருடங்களாக பெரும் செல்வாக்குப்பெற்றிருந்த லிபரல் கட்சியின் டெரெக் லீ (Derec Lee) ஐ ராதிகா தோற்கடித்துள்ளது குறிப்பிடத் தக்கது. கடந்த தேர்தலில் இத் தொகுதியில் புதிய ஜனநாயக கட்சி 4900 வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தது.

கனடாவில் இந்தபொதுத் தேர்தலில் மீண்டும் கன்சர்வேடிவ் கட்சியே பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி ஆட்சியை அமைக்கிறது. அதே நேரத்தில் புதிய ஜனநாயகக் கட்சி 100க்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்த ராதிகா சிற்சபேசன் தனது ஐந்து வயதில் பெற்றோருடன் அகதிகளாக கனடாவுக்குச் சென்றவர். ரொரொண்டோ பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடம் தனது இளநிலை பட்டப்படிப்பை (undergraduate) மேற்கொண்டதுடன் வணிகப்பிரிவில் தனது பட்டப்படிப்பை Carleton Universityயில் மேற்கொண்டார்.

2004ம் ஆண்டிலிருந்து புதிய ஜனநாயக கட்சியின் செயற்பாடுகளுடன் இணைந்த அவர், 2008 தேர்தலின்போது அக்கட்சியின் பிரச்சார செயற்பாட்டாளராகவும் நிர்வாகவியலாளருமாகச் செயற்பட்டார். தற்சமயம் அவர் ரொரொண்டோ பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தில்



சார்பில் Scarborough-Rouge River தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ராதிகா சிற்சபேசனின் வெற்றியறிந்து உலகத்தமிழ் உறவுகள் வாழ்த்தி மகிழ்கின்றனர். தமிழர்கள் மட்டுமா? இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலமாகத் தனது வாழ்த்தை அனுப்பியுள்ளதாக சில இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உலக அரங்கில் தமிழன் தன் தனித்துவம் பேண இவ்வெற்றிகள் கைகொடுக்கும்.

வெற்றிபெற்ற ராதிகா சிற்சபேசனுக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள். எம் தமிழ்ப் பெண்ணே. உன்னால் உலகத் தமிழினமே பெருமை கொள்கின்றது.

☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☺☺☺☺☺☺


## ஜேர்மனியிலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்தினர் தாயகத்தில் மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகின்றார்கள்



**S.K.Silks Paradise**

கல்யாண கூறைச் சேலைகள் பட்டுச் சேலைகள், பட்டு வேட்டிகள், பஞ்சாபி, சுடிதார்கள் இன்னும்....

டோட்மூண்ட் நகரில் மாபெரும் ராஜ முத்திரை

காக்கராச்சோலி சீக்குயின்ஸ் சேலைகள், அனார்க்கலி பஞ்சாமி அனைத்தும் சிறப்பு விலையில்

T.P. 0231-9501648 Germany

**Jasmin Silk House**





புதிய டிசைன்களில் இமிரேஷன் நகைகள், புதிய டிசைன் காப்புக்கள் எம்மிடம் கிடைக்கும்.

Jasmin Silk House
Fester Str.50,
40882 Ratingen,
Germany.

மலிவும், தரமும், ஒன்றாய்க் குலாவிடும்.

T.P. 02102-844744

உரிமையாளர் : T. மோகனதாஸ்

**T.T.S Brothers** Asien Supermarkt

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.

மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்

TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

**Gopara Gnanam**



திருமணப் பெண்ணுக்குரிய கூறைச்சேலை வாங்குவோர்க்கு மணமகனுக்குரிய குருத்தா முற்றிலும் இலவசம்!

T.P. 0231-54 500 28
Mob : 0171 330 65 42

Rheinische Str.81
44137 Dormund
Germany.




**Travel AIR**

www.travelair.de

Tel : 0202 / 4936921,
Tel : 0201 / 24431 04-05

Luisen Str.46, 42103 Wuppertal

உரிமையாளர் : திரு. பரம் ஜெயக்குமார்



**E.S.T.M Jewellery & Schmuck**

எமது தங்க நகை ஸ்தாபனம் ஆனி 3ம் திகதி முதல் புதிய இடத்தில் மங்களகரமான ஆரம்பம்!

Rheinische Str.73
44137 Dormund
Germany.

T.P. 0231-1899023
Mob : 0171 330 65 42

உரிமையாளர் : சின்னத்துரை தயாகரன்


உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANDRA ஆதரவில் ANDRA DIGITAL PRINTING

# கலை அரங்கம்




நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளான செல்வி.சிவாணியா ரவிநந்தா, செல்வி பிருந்தா செல்வநேசன், செல்வி.பவதாரணி ரவிநந்தா ஆகியோர் அண்மையில் நடைபெற்ற நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் கலைவிழா நிகழ்வில் நடன நிகழ்வுகளை ஆற்றுவதை படத்தில் காணலாம்.




யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி கவின்கலை மன்றம் அண்மையில் நடாத்திய அழகியற் கண்காட்சியில் தமது ஆக்கங்களுடன் மாணவிகள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவில் அசோகவனம்




பரதக்கலை தமிழர்களின் வாழ்வில் இன்று பின்னிப் பிணைந்து வாழ்வின் ஒரு அம்சமாகவே மாறி விட்டது.புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் கலையோடு தமிழ்மொழியையும் காக்கப் பெரிதும் உதவுவது இந்தப் பரதக்கலை.

குறிப்பாக பரதக்கலை தமிழர்களுக்கு ஆங்கிலத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள்,பரதத்தை வாழவைத்துக் கொண்டு,தன் தமிழ்மொழியை காக்கத் தவறியவர்களாகவே கருதப்படுவர்.எனவே முடிந்தவரை தமிழ் மொழியில் கலைகள் போதிக்கப்பட வேண்டும்.ஒருவருக்கு கலைகளில் உண்மையான விருப்பு ஏற்படுமானால் ஜப்பான் மொழிகூடப் புரியும்.எனவே தாய்மொழி புரிய தடையேதும் இல்லை!.

இன்று தொழில்நுட்பவியல் உச்சத்தைதொட்டு இருக்கும் வேளை.அன்று நடனக்காட்சிகளில் பின்னணியில் நிறம் மாறுவதற்கு ஒளிக்குமுன்னே வர்ணக் கடதாசிகளைப் பிடித்து மாற்றுவோம். இன்று கணனியுகம் என்ன நிறம் மட்டுமா? நீர் நெருப்பு ஆகாயம், கடல்,காற்று என யாவற்றையும் பின்னணியில் காட்டக்கூடிய கலையரங்கங்கள் வந்து விட்ட காலம்.

இதனை எத்தனை கலைஞர்கள் பாவிக்கிறார்கள். முடிந்தவரை அந்த நுட்பத்தை அறிந்து கொள்ள ஆர்வம் வேண்டும். இந்த நுட்பத்தை மிக அருமையாக கையாண்டு மேடையேறியது அசோகவனம். இதனை சிறப்பாக ஒவ்வொரு காட்சிகளையும் மிகத் துல்லிய அபிநயங்கள் மூலம் ஆடை அலங்காரம், ஒளியமைப்பு, காட்சிமாற்றம்,ஒளிமூலம்கதைசொன்னவிதம் எனப் பல நுட்பங்களை தன்னகத்தே கொண்டதாக அசோகவனம் ஆற்றுகை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இராவணன் சீதையை மண்ணோடு பெயர்த்து தூக்கிக் கொண்டு வானத்தில் செல்லும் காட்சிக்கு,ஒளி அமைப்பும் அபிநயமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு கைகொடுத்தன என்பதனை அக் காட்சி அற்புதமாக உணர்த்தியது.

அத்துடன் இலக்குமணன் இராவணனின் மகன் இந்திரஜித்தின் அம்பு பட்டு வீழ்ந்த போது அநுமான் காட்டிலுள்ள மூலிகைகளை எடுத்து வந்து சாறு எடுத்து பருக வைத்து இலக்குமணனை எழுப்பும் காட்சியோடு சேர்த்து உலகைக் காக்க வாருங்கள் , காடுகளை அளிக்காதீர்கள் ,மருத்துவ தாவரங்கள். மரங்கள் வெட்டுவதால் உலகில் வெப்பநிலை அதிகரித்து பனிமலை உருகுகின்றது. வெள்ளம் பெருக்கெடுக்கின்றது.உலகே மாசுபட்டு நிலநடுக்கம், சுனாமி என இயற்கை தன் சீற்றத்தை காட்டுகின்றது. இதனை உணர்ந்து உலகைக் காப்போம் வாருங்கள் என்று பசுமைப் புரட்சி செய்யும் நடனமாக அசோக வனம் முடிகின்றது.

இலக்கியமாக இருக்கட்டும் பழைய இதிகாசங்களாக இருக்கட்டும் அவற்றில் உள்ள தத்துவங்களை இக் காலத்திற்கு ஏற்ப எடுத்துச் சொல்லும் கலை ஒரு தனிக்கலை.அதனை அற்புதமாக அறிந்து வைத்திருக்கும் ராதிகா மகாதேவா அவர்களுக்கு வெற்றிமணி கலையரங்கின் வாழ்த்துக்கள்.




கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது

Printed by: ANDRA DIGITAL IMAGE 021 222 8929



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org